பெயர் : **rutzd; .Mh;**

பாடம் : jkpo; கற்பிக்கும் முறைகள்

057.TTF

## Unit 1

1. இலக்கண முறைப்படி ஒலி உறுப்புகள் – வாய், மூக்கு, தொண்டை வழியாக இதழ், பல், நா, மேலண்ணம், கீழ்அண்ணம்.... உறுப்புகளின் பெயர்களும் அதன் செயல்பாடுகளும் விரிவாக ஒலித்துக்காட்டி ஆ, ஆ.. வரையிலும் க, கா....க் வரையிலும் எவ்வாறு பிரிகின்றன என்று சொல்லித்தருவது.

2. பேச்சொலியை தரும் பல்வேறு உறுப்புகளும் செயல்படும் விதமும் எடுத்துக் கூறுதல்.

3. தமிழ் ஒலியில் – ஒலிகளின் மாத்திரை அளவு – உச்சரிக்கும் விதம் – வேறுபாடு அறிதல்.

   அரைமாத்திரை – மெய்எழுத்துக்கள்

   ஒரு மாத்திரை – குறில்

   இரண்டு மாத்திரை – நெடில்

   முறையே க், ங், ச்.... க, ங, ச.... கா, ஙா, சா....

4. உயிரெழுத்துக்கள் அ, ஆ.... ஔ வரை ஒலிக்கும் முறையே உச்சரித்து உறுப்புகளின் செயல்பாட்டை விவரித்தல்.

5. மெய்யெழுத்துக்கள் க, கா, கி.... க் வரை அதுபோல் 216 எழுத்துக்களும் எவ்வாறு ஒலி உறுப்புகள் செயல்பட்டு ஒலி எழுகின்றன என்பதை விளக்குகிறது.

6. கலைச் சொல்லாக்கம்–புதிய சொற்கள் எப்படி உருவாகிறது, அதன்

7. மொழியியல் அடிப்படையில் இலக்கணம் – வகைப்படுத்துதல்.

   எழுத்து, சொல், பொருள், யாப்பு,

   அணி இவைகளின் முறை வைப்பு உயிர், மெய், உயிர்மெய்... இப்படி இலக்கணம் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டதை மொழியின் முறையில் அறியலாம்.

8. ஒரு சொல் பல பொருள்

   பல பொருள் ஒரு சொல் என இரு வகைப்படும்.

   ஒலி வடிவம் வேறுபாடுகள்

   ற ர,

   ள ல ழ,

   ண ன,

   முறையே அரம் – அறம், மலை – மழை, மனம் – மணம்

9. சேனாவரையர், நச்சினார்கினியர்,... போன்ற உரையாசிரியர்களின் வழியில் எழுத்து செல், பொருள், யாப்பு, அணி - இலக்கணத்தை அவர்களின் உரையின் சிறப்பை வேறுபடுத்திக் காட்டுதல்.

10. இலக்கியம் என்பது பற்றிய வரையறை,

நாடகம்,

நாவல்,

கவிதை,

சிறுகதை மேற்கண்ட இலக்கிய வகைகளை புதிய அணுகுமுறையில்,

11. மொழி மற்றும் இலக்கணத்திற்கு இடையே உள்ள தொடர்பு அறியச் செய்தல்.

12. இலக்கணத்தின் அடிப்படை கூறுகளை திணை, பால், எண் இடம், சொற்களின் கூறுகள்.

13. பொருள்,

இடம்,

காலம்,

சினை

குணம்,

தொழில் இவற்றை செயல்பாடுகள் செய்யுளில் பயின்று வரும்.

14. பெயர்ச் சொல்,

வினைச் சொல்,

இடைச் சொல்,

உரிச் சொல்

பெயர் காரண, காரிய என இருவகைப்படும். வினை - செய்யும் செயலை குறிக்கும் சொல் வினைச் சொல்.

இடைச் சொல் பெயர்ச் சொல்லுக்கும் வினைச் சொல்லுக்கும் இடையில் வருவது.

உரிச் சொல் - செய்யுளில் மட்டும் பயின்று வருவது இது ஒரு சொல் பல பொருள் பல பொருள் ஒரு சொல் என இருவகைப்படும். 15. வாக்கிய மாற்ற வினா, செயற்பாடு வாக்கியம், செய்தி

15. வாக்கியங்களின் வகைகள் பல உண்டு.

வினா வாக்கியம்,

செய்தி வாக்கியம்,

செயப்படும் வாக்கியம்,

உணர்ச்சி வாக்கியம்......

இவை ஒவ்வொன்றிக்கும் வாக்கியம் அமைத்து அதை மாற்றும் விதம் அறிந்து இருத்தல் வேண்டும்.

*Unit 2* சமுதாய வளர்ச்சிக்கு மொழியின் பங்கு இன்றியமையாதது.

செய்தியை அறிவுறுத்தல்,

பகிர்ந்து கொள்ளுதல்,

கற்பனை,

சிந்தனை,

நயம் உணர்தல்,

புதியன படைத்தல் இவைகள் சமுதாயத்திற்கு மொழியின் பயன்பாடு.

2. மொழி சமூக சூழலுக்கு ஏற்றவாறு வளைந்து கொடுக்கும்.

மதுரை,

கோவை,

தஞ்சை,

சென்னை இவற்றின் வட்டார மொழி வழக்குகள் வேறுபடும் விதம்.

3. மொழி எவ்வாறு உபயோகப்படுத்துகிறோம் அதனுடைய உறவு முறை வேறுபாடு சமூகம் ஏற்றுக்கொள்ளும் நிலை.

4. மொழியின் இனங்கள்

சமுதாயம் வாயிலாக,

இட அமைப்பு வாயிலாக,

இலக்கணம் வாயிலாக,

பிறமொழி தாக்கம் வாயிலாக,

இலக்கியம் வாயிலாக, இவ்வாறு பல்வேறு இனங்கள் மொழில் உள்ளன.

5. வட்டார மொழி – ஒரு வட்டாரத்தில் ஒரு குழு சார்ந்த மக்களால் பேசப்படுவது ஆகும்.

ஊதா மலை வாழ் மக்கள்,

மீனவ மக்கள்

காட்டுவாசிகள்,

நகரத்தார்கள்,

குடிசைவாசிகள் என பல வகை வட்டார மொழிகள் உள்ளன.

6. மொழியின் உளப்பாங்கு – எண்ணத்தை வெளியிடும் கருவி, செய்தியை பரிமாற கற்பனை செய்ய, சிந்தனை செய்ய, நயம் அறிய, புரிந்து கொள்ள எளிமை தெளிவு இவை அனைத்தும் மொழியினால் முடியும். இவற்றில் தாய்மொழி, பிறமொழி பயன்பாடு வேறுபடுகிறது.

7. உளவியல் அடிப்படையில் மொழி – எண்ணத்தை வெளியிடும் கருவி செய்தியை பரிமாற, கற்பனை செய்ய, நயம் அறிய, புரிந்து கொள்ள எளிமை தெளிவு இவை அனைத்தும் மொழியினால் முடியும், மொழி கற்றலின் நோக்கங்கள், குழந்தை முதல் படிப்படியாக மாணவர்கள் கற்றல் கற்பித்தல் உளவியல் வாயிலாக மன வளர்ச்சி, உடல் வளர்ச்சி அவசியம்.

8. மொழிதொடர்பான கற்றல் – கொள்கை – அடிப்படை – தூண்டல் – அவசியம் – ஸ்கின்னர்.

பாவலோ இவர்களின் கற்றல் கொள்கை தூண்டல் – துலங்கள்

செயல்வழிக் கற்றல்

பயன்வழிக் கற்றல் மற்றும் சுய கற்றல் என பல்வேறு அறிஞர்களின் கற்றல் கொள்கைகள் ஆகும்.

9. மொழி தொடர்பான அறிவுத்திறன் கூறுகள்–

கவனம்,

புலன் கவர்ச்சி,

கற்பனை போன்றவையாகும். கற்பனை – மொழிப்பாடம்.

10. மொழி கற்றலின் நோக்கங்கள் – அடிப்படைக் கருத்துக்களை –

கவனம்,

கவர்ச்சி,

பேசுதல்,

எழுதுதல்,

படித்தல்,

கேட்டல் என பல்வேறு அடிப்படைக் கூறுகள்.

11. மொழியை சிறப்பாக கற்றலின் அடிப்படையில் பல்வேறு கூறுகள் –

1. அடிப்படைத் திறன்களை வளர்த்தல்,
2. இலக்கிய நயமுனர்தல்
3. சிந்தனையை வளர்த்தல்,
4. சொற்கலைஞ்சியத்தை பெறுக்குதல்,
5. எண்ணத்தை வெளியிடல்,
6. படைப்பாற்றலை வளர்த்தல்,
7. வாழ்க்கை நுகர்வுகளை இயம்பல்
8. கற்பனைத் திறனை வளர்த்தல்,
9. மக்கள் பயன்பாட்டை அறிதல்,
10. ஒழுக்க உயர்வை வலியுறுத்தல்,
11. நாட்டுப்பற்று, மொழிப்பற்று
12. இறை உணர்வினை ஊட்டல்,
13. சமூக பண்பாட்டு மரபினை அறிதல்,

ஊக்குவித்தல் – குறியீடுகள், மொழிப்பாடம் – கற்றல் கொள்கையில் சிறப்பிடம் பெறுகிறது.

12. மேற்சொன்ன தலைப்புகள் கட்டுரை வினா தந்து தேர்வு நடத்துவது.

1.

## Unit 3

1. மொழி கற்பித்தலில் புதிய கோணங்கள் என்று கூறுவது தமிழ்மொழியை பல்வேறு கோணங்களில் கற்பித்து மாணவர்கட்கு புரிதல் எளிமையாக்குவதே இதன் நோக்கமாகும். பாடங்கள் நடத்தும் முறையில் மாணவர்களை கவருதல் வண்ணம் அமைய வேண்டும். இதில் பல்வேறு நிலைகள் உண்டு.

   வகுப்பறைக் கற்பித்தல் – குழு கற்பித்தல் – தனித்து கற்பித்தல், நுண்நிலைக் கற்பித்தல், வலுவூட்டிகள், குறையறி சோதனைகளும் அவற்றை நிவர்த்திக்கும் வழிமுறைகள் என பல்வேறு கோணங்களில் தமிழ் மொழி கற்பித்தலை மேம்படுத்தவேண்டும்.

2. வகுப்பறை கற்பித்தலில் உள்ள நன்மை தீமைகள் :

   நன்மைகள் :

   1. ஒரே முறையினை பின்பற்ற பலதரப்பட்ட மாணவர்கட்கு கல்வி கற்பிக்க முடியும்.
   2. கற்பிக்கும் வேகமும், அளவும் ஒன்றாக அமையும் என்பதும், சந்தேக வினாகளுக்கு விடையளிக்கும் போது மற்றவர்கட்கும் எளிதில் விளங்கும்.
   3. விரைவாக எளிமையாக தெளிவாக என பலநிலைகளில் புரிந்து கொள்ளும் நிலையில் ஆசிரியர் பாடம் நடத்த வேண்டும்.
   4. நிறைய மாணவர்கட்கு (ஏறத்தாழ 40 மாணவர்கள்) கல்வி கற்க வாய்ப்பு இருக்கிறது.

   தீமைகள் :

   1. பலதிறன்களை உடைய மாணவர்கட்கு, ஒரே மாதத்தில் திறன்களை கற்பித்தல்,
   2. வேகம் மிகுதி, குறைவு என்ற வகையினரை மாணவர்கட்கு பாதிப்பு,
   3. பலர் முன்னிலையில் கேள்வி தெளிவு பெற மாணவர் கூச்சமாக கருதலான்.
   4. நிறைய சொல்லிகேட்டு ஒரே நேரத்தில் விடைதருதல் எளிதன்று.
   5. முழுமையான கற்பித்தல் நடைபெற ஏதுவாக அமையாது.

3. தனித்த கற்பித்தலின் தேவை தற்போது அதிகமாக தேவைப்படுகிறது :

   1. மாணவர்கள் அவர்கள் திறமைக்கு ஏற்றவாறு நிறைய கற்கலாம்.
   2. அனைவரிடமும் கற்கும் ஆர்வம் உண்டாகிறது.
   3. ஆசிரியர்க்கு கவனிக்கும் வாய்ப்பு அதிகம் விளக்கம்.
   4. தன்னம்பிக்கை வளர வழிவகுக்கும்.
   5. கற்க வேண்டிய பகுதிகள் இவை இவை என திட்டவட்டமாக அறிய முடிகிறது.

   மேற்கண்ட முறைகளால் பாடமோ, வகுப்போ முக்கியமன்று. தனித்தன்மை ஒவ்வொரு மாணவனின் மனதையும் சோதித்து அறிந்து அவர் அவர் மனநிலைக்கு ஏற்றவாறு பொருள்களை கற்பித்தலே முக்கியமானதாகும்.

4. குழு கற்பித்தல் :

குழுவகை செயல்பாட்டு கற்பித்தல் கற்றல் நிகழ்வு நடைபெறுகிறது. செமினார் போல – திறன் மிக்க ஆசிரியர்கள் 4, 5 பேரும் குழுவகை மாணவர்களும் இணைந்த கற்றல், கற்பித்தல் நிகழுதல் – குழு கற்றலாகும்.

இதில் நிறைய செய்திகளை உணரமுடியும். சில முக்கிய டிப்ஸ் வழங்கவும். ஊக்கமான கருத்துக்களும் கிடைக்கும். அவ்வப்போது ஏற்படும் கல்வி மாறுதல்கள், தேவைகளையும் இந்த குழுக் கற்றல் அளித்தல்.

5. வரையறைக்கப்பட்ட கற்றல் :

ஒரு குறிப்பிட்ட கருத்துக்கு ஏற்ப பாடத்திட்டம் வரையறுக்கப்பட்டு அதில் நல்ல திறன்கள் மாணவர்கட்கு ஏற்பட்டு கற்பித்தலே வரையறுக்கப்பட்ட கற்பித்தல் நிகழ்வு ஆகும்.

1. பள்ளிகள் தோன்றியது
2. எழுத்தும் கற்பிக்கப்பட்டது
3. அச்சடிக்கப்பட்ட பாடப் புத்தகங்கள்
4. மின்னணு சாதனங்கள் – எரிக் ஆஷ்மி

6. கற்றல் கற்பித்தல் கருவிகள் :

தற்போது கற்றல் கற்பித்தலுக்கு நிறைய கருவிகள் நிறை அமையப்பெற்றுள்ளன. அவற்றில் முக்கியமானவை காட்சி கேள்விக் கருவிகள்.

| | | |
|---|---|---|
| சுவை | 1.0% | |
| தொடுபுலன் | 1.5% | |
| நுகர்வுமூலம் | 3.5% | } |
| செவிமூலம் | 11.0% | } காட்சி கேள்வி : 94% |
| கண் (காட்சி) | 83% | } |

இவ்வாறு கருவிகளை உபயோகிப்பதனால் அதிக அளவு கற்றல் நிகழ்வு ஏற்படுகிறது.

காட்சி → திரையிடக்கூடியவை
காட்சி → திரையிடமுடியாதவை

திரையிடக்கூடியவை → நழுவங்கள், திரைப்பட துண்டுகள், பேசாத படங்கள்

- திரையிடமுடியாதவை
  - முப்பரிமாண உருவாங்கள்
    - செயல்படுபவை
    - செயல்படாதவை
  - படங்கள்
    - விளக்கப்படங்கள்
    - வரைபடங்கள்

- கேள்வி
  - ஒளிப்பதிவாளர்
  - வானொலி

- காட்சிக் கேள்வி
  - பேசும் திரைப்படம்
  - ஒளிஒலி பதிவு நாடா
  - தொலைக்காட்சி

கற்பித்தல் கருவிகள், கல்விப் பயன் நிறைய உள்ளன என்பதை எட்கர்டேல் கூம்பு வடிவத்தில் தெளிவாக குறிப்பிட்டுள்ளமை விளக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கருவிகள் இயக்கத்தை மேலோட்டமாக கூறல்.

6. நுண்ணலைக் கற்றபித்தல் என்பது நுண்ணிய திறன்களை மாணவர்கட்கு கற்பித்தல் என்பது பொருளாகும். கற்பிக்கப்படும்போது சில நுணுக்கமான உத்திகளை கையாண்டு சிறப்பாக கற்பிக்க இப்பயிற்சி மாணவர்கட்கு தரப்படுகிறது. இஃது குறைந்த மாணவர்களைக் கொண்ட 5 முதல் 7 மாணவரை, 5 முதல் 10 நிமிடம் வரை ஒரு சிறு தகப்பு எடுத்துக்கொண்டு ஒரே ஒரு திறமை மட்டும் வளர்த்துக் கொள்வது நுண்ணிலைக் கற்பித்தல் எனப்படும். இப்படி அனைத்து திறன்களும் கற்றபிறகே ஆசிரியர் பாடம் நடத்தும்போது மேற்கண்ட அனைத்து திறன்களையும் கற்றுக்கொள்ள முடியும் என்றாகிறது.

7. தொடங்கு திறன், பல்வகைத் தூண்டல் திறன், முடிக்கும் திறன் என்பன போல பல உள்ளன. மேற்கண்ட இவை மட்டும் நம் பாடப்பகுதியாக அமைய உள்ளன.

தொடங்குத்திறன் உட்கூறுகள்

முன்னறிவு தொடர்பு (வினாக்கேட்டல்),

ஏற்றவிடை தந்தமை,

தொடர்ச்சி,

பொருத்தமான புறம்பான தொடர்,

தொடங்குமுறை (ஏற்றதா வேறுமுறை உண்டா),

8. முடிக்கும் திறன் உட்கூறுகள் :

கருத்துக்களை தொகுத்துக் கூறல், புத்தநிலைப் பயன்படுத்த வாய்ப்பு, முன்னறிவுடன் இணைப்பு, மேலும் கற்றலுக்கு வாய்ப்பு, பல்வகைத் தூண்டல் திறன் – உட்கூறுகள்

ஆசிரியர் பாடம் நடத்தும்போது பல்வேறு வகையில் தூண்டல்களை அமைத்து பாடம் நடத்துவது கற்றலுக்கு ஏதுவாக அமையும் அதன் உட்கூறுகள்.

1. அசைவு,
2. மெய்ப்பாடு,
3. குரலில் ஏற்றத்தாழ்வு,
4. கவனம் ஈத்தல்,
5. வனை மாற்றம்,
6. நிறுத்தம்,
7. புலன் மாற்றம் என்பனவாகும். மேற்கண்ட இந்த உட்கூறுகளை பயன்படுத்தி பாடம் கற்பிக்கும்போது சிறந்த கற்றல் கற்பித்தல் நிகழும் என்கின்றன கல்வியியல் வல்லுநர்கள்.

11. வலுவூட்டிகளை பயன்படுத்தும் திறன் :

வலுவூட்டிகள் என்றாலே பாரட்டும் திறன் என்றே பெயர். கற்பித்த பாடத்தில் ஏதேனும் கேள்வி கேட்டு மாணவன் சரியான பதில் தந்தால் அதற்கு ஏற்றவாறு மாணவனுக்கு தட்டிக்கொடுக்க வேண்டும். பாராட்டி புகழ வேண்டும். இப்படி விடைக்குத் தக்கவாறு பரிசுப்பொருள் தரவேண்டும். இவ்வாறு செய்தலே வலுவூட்டும் திறன் என்கிறோம்.

உட்கூறுகள் :

1. மொழிசார்புடைய வலுவூட்டிகள்,
2. திருப்பக் கூறல்,
3. வேறுவகையில் கூறல்,
4. மொழி சார்புடைய ஒலிகள்,
5. உதவு சைகைக் குறிகள்,
6. கரும்பலகையில் விடையை எழுதுதல்

12. குறையறி சோதனைகளும் குறைகள் நிவர்த்திக்கும் வழிமுறைகளும் :

1. கற்பித்தலில் ஏற்படும் தடுமாற்றங்களுக்கு மீண்டும் ஊட்கூறுகளை தேர்ந்தெடுத்து திரும்பக் கற்பித்தல்.
2. நுண்நிலைக் கற்பித்தல் திரும்ப திரும்ப பயன்படுத்த வேண்டும் திறன்களை நன்கு கற்பிக்கும் வரை.
3. வலுவூட்டிகளை சரிவர பயன்படுத்த வழிவகை காணவேண்டும்.

13. மேற்கண்ட அனைத்திலும் எழுத்துப் பயிற்சியும், செயல்வழி பயிற்சியும் அளித்து நன்கு கற்க செய்ய வேண்டும்.

## Unit 4

1. வட்டார வழக்கில் தமிழ் பேசுவதில்லை குறைபாடுகள் :

அ. ஒரு பகுதியில் பேசும் ஒரு வார்த்தை மற்ற பகுதி மக்களுக்கு புரியாது.

ஆ. மொழி உச்சரிப்பு முற்றிலும் வராது. இவர் எந்த ஊர்காரர் என்ற, நம்ம ஊர் என்ற வேறுபாட்டினை தந்திடும்.

இ. பொருள் மாறுபடுவதனால், செயல் மாறுபட்டு குழப்பம் தென்படும்.

ஈ. அவ்வட்டார மொழி பேசுபவர் துணையின்று வெளியில் செல்வது சிரமமாக இருக்கும்.

2. வாய்மொழி பயிற்சி அளித்தலின் நோக்கங்கள் இன்றியமையாமை பயன்கள்.

வாய்மொழி பயிற்சி அளிப்பதன் மூலம் எழுத்துக்கள் அனைத்தும் தெளிவாக உச்சரிக்க முடியும் தமிழில் சிறப்பு எழுத்தான 'ழ' பயிற்சியின் மூலமே சொல்ல முடியம். மற்றும் 'ர, ற', ' ள, ள, ழ' 'ன, ண, ந' இவ்வாறுள்ள ஒரே ஒலியடைய எழுத்துகள் இடத்திற்கு ஏற்றவாறு உச்சரித்தல் பயிற்சி அவசியமாகிறது.

3. முறைகள் என்ன என்ன முறைகளில் வாய்மொழி பயிற்சிகள் அளிக்கலாம் என்பதே,

அ. ஒரே ஒலியுடைய எழுத்துக்களை கொண்ட பாடல்களை தயார் செய்து பாடச்செய்வது, பேச்சுப் போட்டி, அடுக்கு மொழி உச்சரிப்பு.

ஆ. எழுத்து முறை, சொல் முறை, சொற்றொடர் முறை, வாயுட்குள் படித்தல், வாய்விட்டு படித்தல், என இருவகைப்படும்.

4. திருத்திய பேச்சில் பொருந்திய நல்லியல்புகள் :

1. தெளிவான ஒலிப்பு
2. குரலில் ஏற்றத்தாழ்வு
3. வேகம்
4. உணர்ச்சி
5. அமைதி
6. நடையும் மொழியும்
7. குற்றமில்லாத திருத்தல்
8. கருத்துக்கோவை
9. பத்தழகு பொருந்துதல்
10. உவமைகள்
11. நற்பண்புகள்
12. கேட்போரை பிணிக்கும் பான்மை
13. நடிப்பு

5. ஏற்படும் குறைகள் (திருத்தமில்லா பேச்சில்)

பேசும்போது ஏற்படும் குறைகள்

1. திருத்தமில்லா ஒலிப்பு

2. குரல் ஏற்றத் தாழ்வு

3. கொடுஞ்சொல்

4. கொச்சைமொழிகள்

5. வேகம்

6. அச்சம்

7. கூச்சம்

8. காலதாமதம்

9. தக்க சொல்லின்மை

10. உணர்ச்சி

11. சொற்றொடர்க் குற்றங்கள்

12. வகை குற்றங்கள்

13. உடல்நலக் குறைவு

6. குறைகளை போக்கும் முறைகள் :

1. ஆசிரியர்கள் பேசும்போது தெளிவான மொழிகளையே பேசவேண்டும்.

2. உயிர் மெய்யெழுத்தாக உயிர் எழுத்துக்கள் என் பால் இடம் இவற்றின் மொழி பயிற்றாய்வுக்கூடம் உபயோகப்படுத்தி உச்சரிப்பை செம்மை செய்ய வேண்டும்.

3. அரை மாத்திரை, கால் மாத்திரை, ஒரு மாத்திரை, இரண்டு மாத்திரை என பலவாறு உச்சரிக்க வேண்டியவற்றை பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

1. நாபிறழ் பயிற்சிகள்

2. நாநெகிழ் பயிற்சிகள்

3. முச்சுப் பயிற்சிகள்

7. ஒரே ஒலி பல முறை அமைந்த சொற்கள் (ல, ள, ழ, ர, ற, ன, ண, ந)
மேற்கூறிய எழுத்துகள் வருமாறு சொற்கள் அடங்கிய தொடரை மொழி பயிற்றாய்வுக் கூடத்தில் பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

8. எழுதுதலின் நோக்கங்கள் இரண்டு :

1. ஒலி வடிவ எழுத்துக்களை வரி வடிவமாக எழுதுதல். வரி ஒற்றி எழுதுதல், பார்த்து எழுதுதல், கேட்டு எழுதுதல், போன்றவை அழகாகவும், திருத்தமாகவும் எழுதுதல்.

2. கட்டுரை எழுதுதல், சொந்தமாக படைத்தல், விரைவாக எழுதுதல் முதலியன.

9. எழுதுவதற்கு பயிற்சி அளித்தல்

1. தசை பயிற்சி

2. ஆள்காட்டி விரல், குச்சி

3. கரும்பலகை, எளிய படங்கள் வரைதல்,

4. வெட்டி ஒட்டுதல்,

5. உப்புத்தாள், பட்டு மணல்,

6. கரும்பலகை மேற்கண்ட முறைகளில்

10. நல்ல கையெழுத்தின் நல்லியல்புகள்

1. தெளிவு

2. அழகும் அளவும்

3. இடைவெளி

4. விரைவு

5. எழுத்துப் பயிற்சிகள் முறைகள், வரி யொற்றி எழுதுதல், பார்த்து எழுதுதல், சொல்வது எழுதுதல் (அ) கேட்டு எழுதுதல்.

பிழைக்குரிய காரணங்கள் :

1. தவறானவற்றைக் கேட்டல்.

2. தவறாக ஒலித்தல் (வாளைப்பூ, வாளைப்பழம்)

3. திருத்தமான சொல் அறியாமை (பேசிக்கினேயிரு)

4. பொருள் வேறுபாடு அறியாமை (ர, ற, ள, ழ, ல)

11. சிலப் பிழைகள் :

1. எழுத்துப்பிழை

2. சொற் பிழை

3. சந்திப் பிழை

4. வாக்கியப் பிழைகள்

திருத்தும் முறை :

1. கட்டுரை எழுதி திருத்தச் செய்தல்

2. பிழையான சொற்களை 5 முறை திரும்ப எழுதுதல்

குறியீடுகள் தரலாம். எ.பி, வா.பி, இ.பி எழுத்துப்பிழை வாக்கிய இலக்கணம்.

க.த. (கருத்து தஃறு) என்றை குறியீடுகள் தரலாம்.

பிழைகளையும், வழிமுறைகளையும் நோக்கமும் :

1. ஆசிரியர் பேச்சு

2. பொதுப் பிழைகளை தொகுத்து விளக்குகதல்.

1. கலைத்திட்டத்தை வழங்குவதில் சில அடிப்படைக் கோட்பாடுகள் :

கலைத்திட்டம் என்பது மாணவர்கள் ஆசிரியர்கள் பள்ளிக்கூடங்கள் இவை சார்ந்து. மேலும் சமுதாய சூழலுக்கேற்றவாறு அவ்வப்போது மாறுதலுக்குறியது. கலைத்திட்டம் என்று கல்வி வல்லுநர்கள் உரைக்கின்றனர். தமிழ் கலைத்திட்டம் மேற்கண்ட அடிப்படை கருத்துக்களை கொண்டதாக கீழ்கண்டவாறு அமைய வேண்டும்.

1. கலைத்திட்டம் சமுதாயத் தொடர்புடைதாகவும், நெகிழும் தன்மை கொண்டதாகவும், தனியாள் வேற்றுமையைக் கருத்திற்கொண்டு பண்பாடுடன் கூடிய நல்ல வளர்ச்சி அடைய வேண்டுவனவாக கல்வி தமிழ் கலைத்திட்டம் அமைய வேண்டும். வாழ்க்கை எனும் தொழிலுக்கு ஏற்புடையதாக அக்குதல் வேண்டும.
2. வாழ்க்கைத் தொடர்புடையவனாகவும், பொருளாதார உயர்வு அடைவதாகவும், அனுபவம் வளர்ச்சி ஆகியன அமைய கலைத்திட்டம் உருவாக்க வேண்டும்.
3. குறிக்கோள், தன்னிறைவு உயர்கல்விக்கு தயார் நிலை அடுத்த தலைமுறைக்கு உதவும் வகையில் மொழி, அறிவியல், கணிதம், தொழில்நுட்பம், பண்பாடு என பல்வேறு நோக்கங்களையும் கொண்டதாக அமையவேண்டும்.

2. பாடத்திட்டத்தின் நோக்கங்கள் :

குறிப்பிட்ட வகுப்புக்கு ஏற்றவாறு பாடங்களை வடிவமைத்து தந்து குறிப்பிட்ட திறன்களை மாணவர்கட்கு பெற வைப்பதே பாடத்திட்டத்தின் நோக்கம் ஆகும். உதாரணமாக 1, 2, 3, 4, 5 வகுப்புக்குரிய பாடத்திட்டங்களை அமைத்து திறன்களை வலுப்பெற செய்தல்.

3. தமிழ் பாடத்திட்டம் தயாரிக்க தேவையான சில அடிப்படைக் கருத்துக்கள் :

பாடத்திட்டத்தை பற்றிய முழுமையான அறிவும் மொழி அறிவும் - குறிப்பிட்ட வகுப்பில் தாய்மொழி பற்றிய உடல்- உள்ளம்-சமுதாயம்-தொழில் பற்றிய அறிவு-மொழித் திறன்களை அறிதல் பற்றிய முறைகளை அறிதல்-மொழி ஆசிரியரின் தகுதியும், பயிற்சியும் தேசிய மொழி, நாட்டுப்பற்று இவற்றுடன் கூடிய தமிழ்பாடத்திட்டம் அமைய வேண்டுவன.

4. பல்வேறு நிலைகளின் தமிழ் பாடத்தினை அறிதல், துவக்கநிலை, உயர்நிலை, மேல்நிலை, இவற்றில் உள்ள தமிழ் பாடத்திட்டம் எந்த அளவிற்கு திறன்களை சிறப்பாக வெளிக்கொணர முடியும் என்பதற்கேற்றவாறு ஒவ்வொரு நிலைகளிலும் மதிப்பீடு செய்து தேவைக்கேற்ப மாற்றங்கள் செய்யப்படும் இதனை மதிப்பீடு செய்தல் என்கிறோம்.

5. தொடக்கநிலை அளவில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள தமிழ் பாடத்தினை செய்யுள், உரைநடை, கட்டுரை, கடிதம் மற்றும் இலக்கணத் திறள் முதலியன போதுமான அளவுகள் உள்ளனவா அவை மாணவர்கட்கு ஏற்புடையனவா தேவையான திறன்களைப் பெறமுடியுமா என

பலநிலைகளில் ஆய்வு செய்து குறைகளை நிவர்த்தி செய்து நிறைவு செய்ய வேண்டும்.

6. இடைநிலைப் பள்ளிகளில் மேற்குறிப்பிட்டது போல் ஆய்வு செய்து குறைநிறைகளை முடித்து சிறப்பான தமிழ் கலைத்திட்டம் அமைக்க வேண்டும்.

7. உயர்நிலை பள்ளி அளவில் மேற்சொன்ன முறையில் மதிப்பீடு செய்து, இயல், இலக்கியம், இலக்கணம், திறன்கள் முதலியவற்றை 9 மற்றும் 10ஆம் வகுப்பு மாணவர்கள் பெற்றனவா என ஆய்வு செய்து மதிப்பீடும் செய்து தேவையான மாற்றத்தை கையாளவேண்டும்.

8. கலந்துரையாடல் அலகு ஐந்தில் குறிப்பிட்ட செய்திகள் மாணவர்களுடன் பள்ளி வாரியாக பாடவாரியாக வகுப்பு வாரியாக கலந்துரையாடல் நிகழ்த்தி அதில் வரும் தெளிவான கருத்துக்களை மாணவர்கட்கு புரியவைப்பது.

# Unit 6

1. மொழி கற்பித்தலின் நோக்கங்கள் :

மொழி கற்பித்தலின் நோக்கமானது மொழியை திறம்பட கையாளத் பயிற்சி அளித்தல், பொருள் விளங்க வழிவகை செய்தல், நம்மிடமிருந்து செய்திகள் பிறருக்கு வெளியிடச் செய்யும் பேசுதல், எழுதுதல் இரண்டும், பிறரிடமிருந்து கருத்துகளை உள்வாங்க கேட்டல், படித்தல் இருநிலைகளாலும் மேற்கண்டவற்றினை தெளிவாக உறுதியாக இருக்க பயிற்சி பெறுதல் அவசியமாகும். அதற்கு சிறந்த கற்பித்தல் தேவை அதன் விளைவாக சிறந்த கற்றல் கற்பித்தல் நிகழ்ந்து மொழி சிறப்புர அனைவர்க்கும் சென்று வழிவகை செய்யும் நோக்கமே மொழி கற்பித்தலின் நோக்கமாகும்.

பொதுவான நோக்கங்கள் :

1. அடிப்படைத் திறன்களை வளர்த்தல்.
2. இலக்கிய நயமுனைந்து இன்புறல்
3. சிந்தனையை வளர்த்தல்
4. சொற்களஞ்சியத்தை பெருக்குதல்
5. எண்ணத்தை வெளியிடல்
6. படைப்பாற்றலை வளர்த்தல்
7. வாழ்க்கை நுகர்வுகளை எடுத்தியம்பல்
8. கற்பனைத் திறன்களை வளர்த்தல்
9. மக்கள் பண்பாட்டை அறியச் செய்தல்
10. ஒழுக்க உயர்வை வலியுறுத்தல்
11. நாட்டுப் பற்று மொழிபற்று உண்டாதல்

2. கற்பித்தல் முறைகள்-நடிப்பு முறைகள்

தமிழ்மொழியினை கற்பிக்க எண்ணற்ற கற்பித்தல் முறைகள் உள்ளன அவற்றின் வழி மாணவர்கட்கு கற்பித்தல் நிகழ்த்தினால் புரிதல் திறன் நன்குவளரும் அவைகளை வரிசையாகக் காண்போம்.

நடிப்பு முறை : நடிப்பு முறையில் நிறைய கற்பனைகள் தோன்றும். நம்வீட்டில் குழந்தைகள் முறையே கட்டை, நாற்காலி இவற்றை ரயில்வண்டி, கப்பலாக நினைத்து விளையாடுவர் பால்காரன், கடைக்காரன், கார் ஓட்டுநர், நடத்துநர் என பல்வேறு தோரணையின் தன்னை பாவிப்பர்கள். இப்படி நடிப்பதல் பேரார்வம் கொள்வர். இதனை நாம் கற்றலுக்கு பயன்படுத்த வேண்டும்.

3. விளையாட்டு முறை :

தொடக்கநிலை மற்றும் நடுநிலைப் பள்ளி மாணவர்கட்கு விளையாட்டில் ஆர்வம் அதிகம் இருக்கும் இதனை படிப்பில் செலுத்தி (விளையாட்டு) கற்பித்தல் நிகழ்த்துவது விளையாட்டு முறையாகும்.

1. குறிப்பிட்ட எழுத்துக்களை வட்டமிடல்

(த) க ப (த) ப த (ம்)

2. விடுப்பட்ட எழுத்துக்களை எழுதுதல்

சேவ___ நா___ பூனை குதி___ (ரை, ய், ல்)

3. படங்களையும் பெயர்களையும் பொருத்துதல்

மாணவர்களை வரிசையாக நிற்கச் செய்து ஒரு வரிசை மாணவர்களிடம் பொம்மை மற்றொரு வரிசை மாணவனிடம் சொல் அமைந்த அட்டை கொடுத்து சேவல் என்ற சொல் அமைந்த மாணவனுடன் சேருதல் என.

4. பொருள்களை பார்த்து பெயரெழுதச் சொல்லுதல்.

நிறைய பொருள் பொதித்த சார்டை மாட்டி வைத்து குறிப்பிட்ட எழுத்தில் தொடங்கும் சொற்களை எழுதச் செய்தல், கப்பல், கண்ணாடி, கண், போன்றவை.

5. பொது எழுத்தோடு சேர்த்து வாசித்தல்

| | |
|---|---|
| கா | |
| பா | ய் |
| வா | |

6. பொருத்துதல் விளையாட்டு

| | |
|---|---|
| கைக்கு | கொலுசு |
| காலுக்கு | வளையல் |
| தலைக்கு | மோதிரம் |
| விரலுக்கு | தொப்பி |
| | தோடு |

7. இவ்வாறாக மாறியுள்ள எழுத்துகளை பொருள் தரும் சொல்லாக எழுதுதல்.

| | |
|---|---|
| லப்பக | கப்பல் |
| ல்தகா | காதல் |
| டல்க | கடல் |

இவ்வாறாக,

8. எழுத்துக் கூட்டல்,

9. ஓர் எழுத்து சேர்த்து சொல்லாக்குதல்

10. இரட்டை கொம்பு சேர்த்து எழுதுதல்

11. சொற்களை முறைமாற்றிக் கொடுத்து வாக்கியம் அமைத்தல்.

12. எதிர்ச்சொல் தருக?

13. விடை தருக?

14. ஓர் ஒலி அமைந்த சொற்களை கூறுதல் (துட்டு, எட்டு)

15. கதை அமைத்தல்,

16. அன்னியனை கண்டுபிடித்தல், (பசு, காகம், எருது, சிங்கம்),

17. படம் ஒன்றினைக் காட்டி ஏற்றத் தலைப்பினை தரச் செய்தல்.

18. கதை ஒன்றினைக் கூறி மீதி கதையை கூறச் செய்தல்.

19. இரட்டைக் கிளவியை, விடுகதை போன்றவை

20. ஒரு நிகழ்ச்சி பற்ற சில செய்திகளைச் சொல்லி கருத்து எழுதச் செய்தல்.

இப்படி விளையாட்டு முறை படிப்பு என்பது எளிமையாக மாணவர்களின் நிலைக்கேற்ப விருப்பத்திற்கேற்ப ஆடிபாடி கற்றல் கற்பித்த நிகழவேதுவாகும்.

4. செயல்திட்ட முறை :

ஒரு செயல் திட்டத்தை மையமாகக் கொண்டு பல பாடங்களை இணைத்து கற்பித்தலே செயல்திட்டமுறை-தனது இயற்கை நிலை மாறாமலே முழுமையும் நிறைவு செய்யும் வகையில் செய்து முடித்தலே செயல் திட்டமுறை என்பார் யடீவன்சர். செய்து கற்றல் என்னும் உளநூல் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது என்பார் அமெரிக்க கல்வியாளர் கில்பாட்ரிக்.

இவற்றிலும் சில நன்மைத் தீமைகள் உண்டு அதற்கு ஏற்றார் போல் மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டும். செயல்திட்டமுறைகளின் சில உதாரணங்கள்,

1. அன்றாட வாழ்க்கைக்கு உதவும் பயிற்சிகள்

2. புலக்கல்விக்கான பயிற்சிகள்

3. அறிவு பெறுவதற்கான பயற்சிகள்

உதாரணம்

1. கை, கால்கள் சுத்தமாக வைத்திருத்தல், நன்றாக உடை அணிதல், ஒழுக்கமாக நடத்தல்.
2. கண், காது இவைகளின் இயக்கப்புலன் அளவு, உருவம், எடை, வடிவம் அறிதல்.
3. புலப்பயிற்சிகள் மூலம் எழுத, படிக்க, எண்ணறிவு பெற அறிவு நுட்பங்களையும் பெற தகுந்த பயிற்சி அளிக்கப்பட்டது எழுத்து வடிவில் உப்புத் தாள்களில் வெட்டி ஒட்டுதல், அட்டைகள் எழுதி அமைக்கப்பெற்ற அட்டைகள் என எண்ணற்ற துணைக்கருவிகள் அறிவுப் பயிற்சியினை தூண்டி விடுகிறது.

5. கிண்டர்கார்டன் முறை :

ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த கல்வயாளல் பிரோபெல் தான் கிண்டர் கார்டன் முறையை தோற்றுவித்தார். இதனை குழந்தைகள் பூங்கா என்று அழைப்பர். பள்ளி-தோட்டம், செடிகள் (பூ, காய், கனி) அனைத்தும் மாணவர்கள், ஆசிரியர் தோட்டத்தை பாதுகாத்து வளர்ப்பார். இங்கு 4 வயது முதல் 6 வயது வரை குழந்தைகள் இருப்பர். குழந்தைகள் விளையாட்டு, பாட்டுகள் இவை மூலம் தாமே

விரும்பி கற்பதன் மூலம் மகிழ்ச்சியுடன் கற்கமுடியும் என நம்பினார். அதற்கான சில பொருள்களை உருவாக்கினார் அவை புரோபெல்லின் முக்கிய கொடைகள் எனப்பட்டன. அவை பின்வருமாறு :

1. வானவில்லின் பல வண்ணங்களைப் போன்றே வண்ணங்களுடைய கம்பளி நூலால் ஆன ஆறு பந்துகள் இவை எளிய விளையாட்டு பொருட்கள் இவற்றை விவரிப்பது தொட்டு பார்ப்பது, வண்ணங்கள் அறிவது, பாடுவது, ஆடுவது, ஆகியன இவற்றுடன் தொடர்புடைய கல்வி செயல் ஆகும்.
2. மரத்தலான ஓர் உருண்டை, கனவடிவப் பொருள், நீர் உருளை ஆகியன பந்துடன் ஒப்பிட்டு பார்த்தால் தடவிப்பார்த்து உணர்தல் ஆகியன இவற்றுடன் தொடர்புடைய செயலாகும்.
3. எட்டு சிறு பகுதிகளாக பகுக்கப் பெற்ற 4 கனவடிவ உருவம்.
4. நீள் சதுர வடிவங்களில் பருக்கப்பெற்ற 4 கனவடிவ உருவம்.
5. 27 சிறு பகுதிகளாக பிரிக்கப் பெற்ற 3 கன வடிவ உருவம்
6. வண்ணந்தீட்டப் பெற்ற சிறு மரப்பலகைகள்
7. இணைக்கப்பெற்ற நீள் கட்டைகள்
8. சக்கரங்கள் ஆகியவை புரோபெல்லன் முக்கிய கல்விக் கொடைப் பொருள்கள். மேலும் இவை மாண்டிசேரி அம்மையாரின் கற்பித்தல் கருவிகளின் ஒத்திருப்பதாகும்.

மேலும், புரோபெல் தொழிற்கல்வி குமாரப்பருவ மாணவர்கட்கு ஊக்கப்படுத்தினார். இயற்கையை கற்பதன் மூலம் ஒழுக்கம், சமய அறிவு, ஆன்ம நிலை கிடைக்கப்பெரும் என கூறுகிறார்.

6. வார்தா கல்வி முறை (தொழில் கல்வி முறை)

வார்தா எனும் ஊரில் (மத்திய பிரதேசம்) முதன் முதலில் தொடக்கம். ஒரு தொழிலை (கல்வி) ஆதாரமாகக் கொண்டு கற்பிக்கப்படுவதால் இதனை ஆதாரக் கல்வி எனலாம்.

நோக்கம் : தீங்கிழைக்கும் எண்ணமும், சுரண்டலாம் இல்லா–அனுபவம் + கல்வி = பொருள் + அறிவுப் பள்ளி + செலவு பாதி பலவகை திறன்களையும் மாணவர்கள் பெற வேண்டும்.

7. டால்டன் திட்டம் ஆய்வுக்கள முறை :

மாணவர் தாமே முயன்று கற்று தெளிய வேண்டி உருவாக்கப்பட்ட திட்டம் – ஹெலன் பார்க் ஹர்ஸ்ட் என்ற அமெரிக்க பெண் ஆசிரியர் தோற்றுவித்தார். 1920 முதல்முதலாக டால்டன் உயர்நிலைப் பள்ளியில் செயல்படுத்தப்பட்டாள் – இப்பெயர் வந்தது கற்பிக்க வேண்டும் என்று ஆசிரியரிடம் தோன்றுவதை விட மாணவனிடத்தில் கற்க வேண்டும் என்ற ஆர்வம் தோன்றுவதே கற்றலுக்கு அடிப்படை என் அம்மையார் கருத்து.

கொள்கைகள் :

பள்ளி வேலை பயன்தக்கதாக்க வகையில் மாற்றியமைத்துக் கொள்ளும்வண்ணம் அமைதி, தனி அறை, பாட ஆராய்ச்சி நிலையம்-ஆய்வுக் களமுறை எனப்பட்டது. ஆசிரியர் குறிப்பு (ஒப்படைகள்) தேவையான அய்வு நிகழ்வுகள் - தேவையான நேரம் தேர்வு (எழுத்து + வாய்மொழி) முடித்து அடுத்த ஒப்படைகள் தொடங்க வேண்டும்.

சிறப்புகள் :

கூடச் செய்தல், முயன்று கற்றல், சுதந்திரமாக வேலையை செய்தல் - ஆர்வம் தேவை எனில் ஆசிரியர் உதவி-தனித்தனி திறமை-கையெழுத்துப் பயிற்சி - வாய்மொழி வினாவிடை - அசிரியர் பங்கு பொறுப்பானது, சுதந்திரமான தனிவளர்ச்சி எட்டமுடியும். ஆய்வுக்கள முறையில் மகிழ்ச்சியாக கற்கும் ஆர்வம் ஏற்படும் வகையில் சிறப்புகள் உள்ளன சில குறைபாடுகளும் உண்டு.

8. வருடத்திட்டம்




மேற்கண்ட முறைப்படி வருடத்திட்டம் வகுத்துக் கொண்டு அதற்கேற்றவாறு தமது பாடப்பகுதிகளை அலகுகளாக பிரித்து ஒவ்வொரு அலகும் எத்தனை பாடவேலையாக (பாட பிரிவாக) வேண்டுமோ அதற்கேற்றவாறு பிரித்து ஒவ்வொரு பாட பிரிவு வேலைக்கும் என்ன பாடம் நடத்த வேண்டுமோ அதை தயார் செய்வது தான் பாடக்குறிப்பு அகும்.

6. அலகுத் திட்டம்

ஒரு பாடத்தை தேவைக்கேற்ப 10 அலகுகளாக பிரித்து கொண்டு ஒவ்வொரு அலகிற்கும் தேவையான பாடப்பிரிவு வேளைகளை பிரித்து (10, 8, 12, 18, 7, 4 என பல தேவையானவற்றை)

7. கண்டறி முறை :

டாக்டர். ஆம்ஸ்டிராங் என்னும் ஆங்கிலேயர் இஃது நேரடி அனுபவ முறைகளில் ஒன்றாகும். மாணவர்கள் ஆராய்ச்சியில் ஈடுபடுவது போன்றதாகும். ஆசிரியரின் வழிகாட்டுதலுடன் மாணவன் தான் சுயமாகவும் சிந்தித்து செயல்பட முடிகிறது. இது விதிவரும் முறையில் இவ்வாய்வினை (முறையே) மேற்கொள்ளலாம். ஆய்வாளர் அறிவியல் ஆய்வு முறையினை இம்முறையில் மேற்கொண்டார். அதே போல் மொழியில் இலக்கணத்தை அம்முறையில் மேற்கொள்ளலாம். இதில் மாணவர்கட்கு ஆய்வுச் சிந்தனை, உற்சாகம், புதியன கண்டுபிடிப்பு ஆகியவற்றை ஆசிரியர்கள் ஏற்படுத்த வேண்டும். தகுந்த வழி காட்டலாம். அனைத்து பாடங்களுக்கும் அம்முறை பயன்படுத்த இயலாது. பாடநேரம் போதாது எனவே ஒரு சில குறிப்பிட்ட தலைப்புக்கே பொருந்தும் குறைகளாக அனைத்து மாணவர்களும் திறன் வேறுபட்டிருக்கும் அனைத்து பாடப் பொருளையும் கற்கமுடியாது-ஆசிரியர் மிகுந்த ஆர்வம், திறமை உடையவராகத் திகழ்தல்வேண்டும். பரம்பரையாக கண்டுள்ள உண்மையை மீண்டும் மீண்டும் மாணவர்களை ஈடுபடச் செய்தல் காலமும் சக்தியும் வீணாகும்.

8. தனிப்பயிற்சி முறை :

ஒவ்வொரு மாணவனும் தன்னுடைய ஆற்றலுக்கு தக்கப்படி தன் முயற்சியால் தனித்தனியே கற்பதாகும் ஏனெனில் அறிவுத் திறன், நுண்ணறிவு, உடல், மனம், உள்ளத்தேவைகள் ஆகிய யாவும் ஒரே மாதிரி இருப்பதில்லை எனவே தன் திறனுக்கேற்றவாறு இந்த தனிப்பயிற்சி முறையில் கற்று முன்னேறலாம்.

ஆசிரியர் பங்கும் வேலையும் :

ஒரு ஆண்டுக்கு தேவையனவற்றை (பாடத்தை பல பாடப்பிரிவுகளாக பிரித்துக்கொண்டு அதையும் பல உட்பிரிவுகளாக பிரித்து தனித்தனி மாணவர்கட்கு ஒப்படைப்புகள், தாள்கள், அட்டைகள் அதை மாணவர்கள் பெற்று தனித்தனியாக முன்னேறுவர்.

குறைகள் :

ஆசிரியர்க்கு வகுப்பறை நேரம் போக மீதி நேரமும் காலம் கடந்தும் செய்ய வேண்டியிருக்கும். நிறைய ஒப்படைப்புகள், தயார் செய்தலில் சிரமம்-உளவியல் அடிப்படையில் ஒப்படைப்புகளை தயார் செய்ய வேண்டும். மாணவர்கள் பின்தங்கிய இருப்பின் உடன் நின்று முன்னேற்ற வேண்டும். தனிபயிற்சி முறை குறைவான மாணவர் விகிதம் இருப்பின் ஏதுவாக அமையும்.

# Unit 7

1. படைப்பாற்றலை கற்பித்தல் :

மாணவர்கள் தங்களின் எண்ண பிரதிபலிப்பு படைப்பாற்றலாக உருவெடுக்க வேண்டும் எழுத்து–வாய்பாடு–நடிப்பு–என இவ்வகையில் படைப்பாற்றலை ஏற்படுத்த முடியும். நோக்கமாக எழுதுவதில் எளிமை, இனிமை, சொல்வளம், நயம், பொருள் இனிமை இவை எல்லாம் பொருந்த படைப்பு அமைய வேண்டும். எழுதுவதில் கதை, கவிதை, கட்டுரை, உரைநடை என பல வடிவங்களில் நல்ல எண்ணங்கள் சிந்தனைகள், கருத்துக்களாக அமைவன எழுத்தாற்றல் மிக்க படைப்புகளாகும். கண்ணதாசம், பாரதிதாசன், பாரதியார், சுரதா, அண்ணா என பற்பல எழுத்தாற்றல் மிக்கவர்கள் இருந்துள்ளனர். இவர்கள் தங்களின் எழுத்தாற்றல் மூலமாக மக்களை நல்வழிப்படுத்தினார்கள். அரசியல், விழிப்புணர்ச்சி, கருத்து பரிமாற்றம் என்பனவெல்லாம் எழுதுவதினால் பெறப்படுவனவாகும். இதை ஒவ்வொரு மாணவர்களும் படைப்பிலே எழுத்தாற்றலை பின்பற்ற வேண்டும். சமுதாயம் சிறக்க எழுத்து மூலம் கருத்தை வெளியிட முடியும் என்பதற்கு நமது இலக்கியர்களே முன்னோடிகளாகும்.

2. இலக்கிய நடையில் கற்பித்தல் :

ஒவ்வொரு வகுப்புக்கும் ஏற்ற நடையில் பாடம் கற்பித்தல் சிறப்பு உள்ளது. அதில் இலக்கிய நடை என்பது. கவிதையை படிக்கும் போது பாடிக்காட்டி பாடம் நடத்துவது சிறப்பு படித்து ஏற்ற, இறக்கம் அமைய பாடம் நடத்துவது. நடிப்பு முறையெனனின் நாடகப் பாங்கில் இருப்பது எதுவோ அவற்றை நடித்துக்காட்டி பாடம் நடத்துவதாகும். இவ்வாறு இலக்கிய நடை என்பது பாடப்பகுதிக்கு ஏற்றவாறு கற்பித்தல் முறையே ஆக்கிக் கொள்வதாகும்.

3. கருத்துக்களும், சிந்தனைகளும் :

எழுதும் ஆற்றல் படைத்தோர்க்கு தனது கருத்துக்கடை படைத்துக்காட்டி மாணவர் கட்டு சென்று சேறும் வாய்ப்பாகும். படைக்கும் திறன் உடையவர்கள் தனது கருத்துக்களையும் சிந்தனைகளையும் வெளிப்படுத்த உதவுவது தான் படைப்பாற்றல் எழுதும் திறனாகும்.

4. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப தமிழ் நுட்ப வார்த்தைகளை உருவாக்கள் :

எழுதும் திறன் கொண்டவர்கள் புதிய புதிய சொற்களை உருவாக்குவதிலும் திறன் கொண்டவர்களாகத் தான் இருப்பர். அப்படித்தான் அறிவியல் தொழில்நுட்ப வார்த்தைகளை தமிழில் சொற்களை உருவாக்குதல் சாலச் சிறந்தது என நிறைய சொற்களை உருவாக்கியுள்ளனர். எடுத்துக்காட்டாக மிதிவண்டி, தொடர்வண்டி, ஊர்தி, வங்கி, அங்கி, பேருந்து, பொறியியல், எந்திரம், என பல.

5. தெளிவு, விளக்கம், எளிமை, சுருக்கம் :

எழுத்தின் மூலம் தமது எந்த கருத்துகளையும், சிந்தனைகளையும் கூறலாம். அவை எளிமையாக கருத்து தெளிவாக விளக்கமாக, சுருக்கமாக அமைத்து தனது படைப்பை பெருமை சேர்க்க முடியும். உதாரணமாக திருக்குறள், ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் என பல இலக்கியங்கள் பெரிய பெரிய விஷயங்களையும் கூட எளிய மாத்திரை வடிவில் தந்துள்ளனர் குறிப்பிடத்தக்கது.

6. இலக்கிய விமர்சனம் பொது விதிகள் :

விமர்சனம் எனும்போது படைக்கப்பெற்ற இலக்கியத்தில் சிறப்பு என்ன, ஏற்புடைமை என்ன உண்மை, பொய்மை என்ன என்பதை விவரிப்பது தான் விமர்சனம் ஆகும் இதை மொழி அறிவு, கருத்தாயம் அனுபவம் மிக்க ஒருவரே விமர்சனம் செய்யத் தகுதியானவர். யார் வேண்டுமானாலும் விமர்சனம் செய்துவிட முடியாது. எக்கருத்த எங்ஙனம் எந்த ஆதராமும் கொண்டும் உயர்த்த வீழ்த்த முடியும் இதுவே விமர்சனம் ஆகும்.

7. புதியன படைத்தல் வழுவலகால வகையினாலே என்ற தொல்காப்பியத்திற்கு இணங்க கருத்துக்கள் புதிது. தேவையனின் பழைய கருத்து நீக்கி, புதியவற்றை ஏற்கலாம் என்கிறார் தொல்காப்பியர். காலத்திற்கு காலம் படைப்பாற்றல் மாறுபடுகிறது சிறப்பு பெருகிறது. புதிய படைப்பாற்றல் சிந்தனையை வளர்க்க ஆசிரியர்களாகிய நாம் பாடுபட வேண்டும் மாணவர்களை சிந்திக்க, ஆராய, பகுத்தாய விட வேண்டும்.

# Unit 8

1. ஆய்வின் வகைகள் :

அய்வு வகைகள் பல்வேறு பட்டணவாக உள்ளன.

1. இலக்கிய ஆய்வு
2. வரலாறு ஆய்வு
3. புலனாய்வு
4. உற்றுநோக்கல் ஆய்வு
5. கள ஆய்வு
6. அறிவியல் ஆய்வு
7. புதியன கண்டுபிடிக்கும் ஆய்வு
8. பகுப்பாய்வு
9. திறனாய்வு

என மேலும் பல்வேறு வகையான ஆய்வுகளை பார்க்க முடிகிறது. இங்கே ஆய்வு என்பது,

1. புதியன ஒன்றை கண்டுபிடிப்பது
2. இருப்பனவற்றில் சிக்கலை தீர்ப்பது
3. இருப்பவற்றில் மேலும் எளிமை செய்வது

என்பதே ஆய்வின் நோக்கங்களாகும்.

2. செயல் ஆய்வு :

பல சிக்கல்கள் பிரச்சனைகள் தீர்வு காண வேண்டியவை கருத்தில் கொண்டு அவற்றை திரட்டி செயல்திட்டத்தை மையமாகக் கொண்டு நேரடியாக பயிற்சியல் ஈடுபடுகின்றனர். செயலை செய்து ஆராய்கின்றனர் அதனையே செயலாய்வு என்கின்றனர் இதில், செயலை தேர்ந்த எடுத்தல், திட்டமிடுதல், நிறைவேற்றுதல், மதிப்பிடல் என பகுத்து செயல்திட்டமுறையினை மேற்கொள்ள வேண்டும். நன்மைகளாக, நோக்கத்துடன் செயலில் ஈடுபடல், பொறுப்புணர்ச்சி கூட்டுறவு மனப்பான்மை, விட்டுக்கொடுத்தல், சிக்கல்களைத் திர்த்தல், உடல் உழைப்பு, மன எதிர்பார்ப்பு என செயல்திட்ட முறையில் சிறப்புகள். இதில் சில குறைகளும் உள்ளன. பாடப்பொரள் அனைத்தையும் அறியமுடியாது, செயல்திட்டத்தல் இயல்பாக பொருந்திவரும் பாடங்கட்கு மட்டுமே இவ்வாய்வு செய்யமுடியும். வெளி இடங்களில் நடைபெறுவதால் ஒழுங்கு நடவடிக்கை, ஏமாற்றுதல், பணச்செலவு, காலச் செலவு, இவ்வாறு தீமைகளும்.

3. வளர்ச்சி சார்திட்டங்கள் ;

மொழியில் வளர்ச்சி சார்ந்த திட்டங்களை வகுத்துக்கொண்டு புதுபுது திட்டங்கள் மாணவனின் முன்னேற்றத்திற்கு தேவையானவற்றை ஆக்குதல் வளர்ச்சி திட்டங்கள் ஆகும். திறன் மேம்பாடு அடைய தீட்டப்படும் திட்டங்களாகும்.

4. புதிய ஆய்வுகள் :

பல்வேறு ஆய்வுமுறைப்படி நம் பாடப்பகுதியினை கற்பது போலவே அவர்கட்கு புதிய ஆய்வு சிந்தனை தோற்றவேண்டும். மேலும், புதிய வழியில் ஆய்வு பற்றிய செய்திகளைத் தரவேண்டும்.

## Unit 9

1. மொழியாசிரியரின் நிலை :

தற்கால சூழ்நிலையின் ஆசிரியரின் பற்று கல்வித் தகுதி பயிற்சி பிற ஆசிரியர்களுடன் கலந்துரையாடல் இவற்றுடன் மொழியாசிரியர் பண்புகளாக கீழ்கண்டவற்றை பார்க்கலாம்.

2. மொழியாசிரியரின் பண்புகள் :

1. மொழிப்பற்று
2. இலக்கண இலக்கியப் புலமை
3. எடுத்துக்கூறும் ஆற்றல்
4. குரலில் ஏற்றத் தாழ்வு
5. திறமையாக எழுதும் திறன்
6. உள்ளங்களை ஒன்றாக்குதல்
7. உளநூல் வள்ளுனர்
8. கலை ஆர்வம்
9. பருவம் அறிந்து பயிற்றுதல்
10. பயிற்றலில் அடிப்படை விதிகள்
11. விழைவுடன் கற்பித்தல்
12. தற்பெருமை, சினம் இல்லாதிருத்தல்
13. தவறுகளைத் திருத்தும் பண்பு
14. நகைச்சுவை நாட்டம்
15. நல்லொழுக்கம், பெருந்தன்மை
16. மொழியாக்கத்திறன்/நூல்கள் இயற்றல்
17. உடல் ஓம்பல், உலகப்பொது அறிவு
18. உலகத்தோடு ஒட்ட ஒழுகல்

மேற்சொன்ன பண்புகள் அனைத்தும் மொழி ஆசிரியருக்கு உரித்தானதாகும். இவையே மொழியாசிரியரின் உயர்ந்த பண்புகள் ஆகும்.

2. பணிமுன் பயிற்சி :

ஆசிரியர் பணிக்கு செல்லும் முன் சரியான கல்வித் தகுதியுடன் ஓராண்டு ஆசிரியர் பணிக்காக பி.எட்., பயிற்சி பெறுவது அவசியம் தமிழாசிரியருக்கு 5 மாத பயிற்சியான பட்டைய பயிற்சியும் இருக்கும். (பி.டீ.சி) இவ்வாறு தகுந்த ஆசிரியர்களுக்கு கல்வித் தகுதிகள் நிறைவு பெற்றவுடன் ஆசிரியர்க்கான பயிற்சி மேற்கொள்ளுதலே பணி முன் பயிற்சி ஆகும்.

3. பணியிடை பயிற்சி :

பணியிடை பயிற்சி என்பது பணியில் சேர்ந்த பிறகு அளிக்கப்படும் புத்தொளிப் பயிற்சி, அது ஓரிரு நாட்கள் நடக்கும் சில நேரங்களில் 5, 10, 15, 30 நாட்கள் கூட நடைபெறும். இந்த இடைக்கால் குருதியாக பயிற்சி பணியிடைப் பயிற்சி எனப்படும். (ஓரியண்டேஷன்) கருத்துயர்வு புதியன அறிதல், இவற்றிற்காக இவ்பணியிடை பயிற்சி அளிக்கப்படுகிறது.

## Unit 10

1. தமிழ்மொழி கற்பித்தலில் கனிணியில் தமிழ் மொழியின் பங்கு :

தற்போது கணினி வழி தமது தமிர் பாடப்பகுதியினை நடத்துவதற்கு ஏதுவாக மற்ற மொழி சாப்வேர்கள் போல தமிழ் வழிமென் பொருள்கள் கிடைக்கின்றன அவற்றின் வழி பாடப்பகுதிகளை பகுத்து திட்டமிட்டு, கருத்துப்படங்கள் அட்டவணைகள், விளக்கங்கள் எ.கா. படங்கள் மொழி உச்சரிப்பு இப்படி இன்றைய செய்திகள் நம்மால் கணினி வழி அறியமுடிகிறது. கீ போர்டு தமிழ் எழுத்து பொழிந்தது கிடைக்கிறது. அதன் மூலம் எளிமையாக டைப் செய்து நிறைய பாடங்களை எளிமையாக ஸ்லைடு தயாரிக்க முடியும். இதை கணினி திரை வழியாக வழியாக மாணவர்கட்கு தெளிவாக கற்பிக்க முடியும். கற்பித்தல் நிகழ்வுகள் ஒர கம்ப்யூட்டர் ஒரு மனிதர் (மாணவர்) என்றில்லாமல் ஒரு கம்ப்யூட்டர் வழி பல ஆயிரம் மாணவர்களுக்கு பெரிய திரைமூலம் கற்பிக்க இயலும், தொலைவில் (வெளிநாடு) எங்கிருந்தாலும் கற்கமுடியும்.

2. கணிப்பொறி கொண்டு கற்பித்தல் செயல்பாடுகள் முறைகள், முதலில் விவரங்களை எழுதி தயார் செய்தல் பின்பு அதனை டைப் செய்தல் பின்பு. அனிமேஷன் செய்தல், படங்கள், ஒலிஒளி உதவியுடன் இயங்கச் செய்தல் இவ்வாறு ஒரு பாடத்தை கற்பிக்கும்போது நாம் செயல்பட வேண்டியது, இதில் மேலும் பல உதவி செய்யும் உட்கூறுகளை பயன்படுத்தலாம் விரைவில் கற்பிக்கலாம்.

3. கற்றல் வளமூலங்கள் :

பொது நூலகங்கள், மியூசியம், பார்வைக்குரிய பொது சிறப்புமிக்க இடங்கள், கோயில், ஆணைகள், அரண்மனைகள் நெட் சென்டர், கணினி வழியாக, நெட் சென்டர், சி.டி. (குறுந்தகடு, சுயகற்றல், கற்றலுக்கான மென்பொருள்கள்).

4. கணினி வெளியீடுகள் ;

ஆய்வுகள், நெறிகள், மேற்படிப்பு படிக்க ஆய்விற்கு மிகவும் உறுதுணை செய்ய காப்பர் பேஸ்ட் எளிமை நெட்டிலிருந்து செய்திகள் அறிய ஆய்வாளருக்கு பெரிதும் துணை புரிவதாக அமையும்.

தமிழை கணினி கொண்டு கற்பிக்கும் போத டி.எல்.எம். என்ற கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் எளிமையாக தயாரிக்கலாம் 3டி 2டி என நமக்கு தேவையான வடிவில் ஒலியுடனும் கம்ப்யூட்டர் மென்திட்டம்.

பல் ஊடக வழியில் தகவல் அளித்தலை நடைமுறைப்படுத்த தேவையான கருவிகள்,

1. கம்ப்யூட்டர்
2. டிஜிட்டல் கம்ப்யூட்டர் அனலாக் முறையில் மாற்றியமைக்கும் முறைகள் ஆகியவற்றிற்கு இடையே பாலமாக அமையும் வண்கலன்கள்.
3. பல் ஊடக வழியில் தகவல்களை படுத்து ஆராயவும் முறைப்படுத்தவும் தேவையான கம்ப்யூட்டர் வண்கலன்கள்.
4. பல்வேறு தகவல்களை ஆய்வு செய்து ஒருங்கிணைக்கும் மென்பொருள் டிரைவர், ப்ராசசர்,

ஊடுக உட்கூறுகள் :

உரைநடை, படங்கள், திரைப்படங்கள் இயக்கம், ஒலி ஒருங்கிணைப்பு இவ்வாறாக கணினி வழி தமிழ் கற்பித்தல் பெருமளவு உதவுகிறது.

---

பெயர் : **rutzd; .Mh;**

பாடம் : **jkpo;** கற்பிக்கும் முறைகள்

*Unit 1*

1. தாய்மொழி கற்பித்தலின் அவசியம் கீழ்வருமாறு வரிசைப்படுத்தலாம். அவை.

1) அடிப்படைத் திறன்களை கேட்டல், படித்தல், பேசுதல், எழுதுதல் என்றபடி மேம்பட செய்தல்.

2) இலக்கியங்களை ரயமுணர்ந்து, இன்புற்று மேலும் படிக்கும் ஆர்வம் ஏற்படுத்தலாம்.

3) இலக்கிய இலக்கணங்களை படிப்பதன் மூலம் நமது சிந்தனையை வளர்த்தல்.

4) சொற்களஞ்சியத்தை பெறுக்குதல்.

5) எண்ணத்தை வெளியிட உதவும் கருவியை செம்மைப்படுத்துதல்.

6) படைப்பாற்றலை ஊக்கப்படுத்தி சிறந்த படைப்பை உருவாக்குதல்.

7) தனது வாழ்க்கை நுகர்வுகளை எடுத்துக் கூறுதல்.

8) கற்பனைத் திறனை வளர்த்தல் / மக்கள் பண்பாட்டை மேன்மேலும் உயர்த்துதல்.

9) ஒழுக்கம், மொழிபற்று நாட்டுப்பற்று அறிவுறுத்தல்.

10) இறைவுணர்வினை ஊட்டல், சமூக பண்பாட்டு மறபினை அறிதல்.

2. உரைநடையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி நும் கருத்துக்களை இலக்கிய வரலாற்றின் வழி**apy;** நின்று விளdlj்y;

தோற்றம் :

உரைநடையின் தோற்றம் கிட்டதட்ட இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் 18-ம் நூற்றாண்டிலே இலக்கணத்திற்கு உரை எழுதிய சேனாவரையர், சேந்தனார், இம்பூரணார், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினயர், கல்லாடர், இறையனார், களவியல் உரை, இலக்கியத்திற்கு உரை எழுதிய பரிமேளழகர், அடியார்க்கு நல்லார், நன்னூலுக்கு சிவஞான முனிவர், மயிலை நாதர், யாப்பு - குணசாகரர். என பல உரைநடை வளர்ச்சிக்கு பெரிதும் போற்றப்பட்டவர்கள். நிறைய இலக்கியங்கட்கும் உரை எழுதியவர்கள் உண்டு. காலப்போக்கில் 20-ல் நாவல் உண்டாயிற்று (புதினம்) முதல் நாவலாக பிரதாப முதலியார் சரித்திரம், எழுதியவர் மயுரம் வேதநாயகம் பிள்ளை. வெளிநாட்டு கல்வியாளர்கள் இந்தியாவிற்கு வந்தவுடன் அச்சு எந்திரம் எழுது பொருள்கள் என பல ஏற்படலாயின. பாரதியார் கவிதைகள், பாரதிதாசனார் போன்றவர்கள் தங்களுடைய கவிதைகளை வசன கவிதை என தோற்றுவித்தனர்.

சிலப்பதிகாரத்தில கூட உரையினயிட்ட பாட்டைச் செய்யுள் என்பன போன்ற அமைப்பில் இலக்கியம் யாக்கப்பட்டுள்ளது. தற்போது அனைத்தும் உரைநடை இலக்கியமே. அதிக அளவில் உருவாகிறது. ஓலைச் சுவடியில் உள்ள நிறைய இலக்கியங்களை அச்சேற்றிய பெருமை உ.வே.சா. அவர்களையேச் சாரும். கம்பராமாயணத்திற்கு உரையெழுதிய பெருமை வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியர் சுமார் 30 வருடங்கள் உழைத்து உரை எழுதினார். இவ்வாறாக இலக்கணம், இலக்கியம் யாவற்றிற்கும் உரைநடை பங்கு 18-ம் நூற்றாண்டில் தொடங்கி 20ம் நூற்றாண்டில் நன்கு வளர்ச்சியுற்று தற்போது செழித்து வளர்ந்து கொண்டு இருக்கிறது.

வளர்ச்சி : வளர்ச்சி என்பது 18-ம் நூற்றாண்டில் தோன்றிய உரைநடை தற்போதும் 20-ம் நூற்றாண்டிலும் வளரத் தொடங்கியது. கவிதை உள்ளே உரைநடை தோன்றியது சிலப்பதிகாரத்தில். அது சற்றே மறைந்து வெளிப்படையாக இலக்கண இலக்கியங்கட்கு உரை எழுதத் தொடங்கினார்கள். இதுவே உரைநடை காலத்தின் வளர்ச்சி எனலாம். அது ஆங்கிலேயர்கள் வருகை மற்ற அனைத்து இலக்கியங்களும் இலக்கண புத்தக வடிவம் பெற்றன. அனைத்து உரைநடைகளும் வடிவம் பெற்றன.

இன்று உரைநடை கையெழுத்து பிரதியிலிருந்து அச்சு எந்திரம் வாயிலாக புத்தக வடிவம் பெற்று வளர்ந்துள்ள. 19, 20-ம் நூற்றாண்டில் தற்போதைய 21-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே கணிணியின் உதவி கொண்டு பிளாப்பி, சிடி, பென்டிரைவ் என பல

வடிவங்களில் உரைநடை தொகுப்பு வெளிவரலாயின. வெப் உலகம் இன்று இண்டர்நெட் மூலமாக அனைத்து நாள், வார, மாத இதழ்களை படிக்க முடியும். அதிகப்படியான புத்தகம் இப்போது வலை தளம் வழியாக அனைத்து வகையான இலக்கண இலக்கியங்களும் உறுவாகின்றன. அந்த அளவிற்கு உரைநடை வளர்ச்சி பெற்றுள்ளது.

முடிவாக 18-ம் நூற்றாண்டில் தோன்றிய உரைநடை தற்காலத்தில் சிறிய சிப் லே காட்சி கேள்வி பொருளாக அமையப் பெற்றுள்ளது. மிகச்சிறந்த வளர்ச்சியினை பெற்றுள்ளது. என்பதில் பெருமை கொள்ள வேண்டிய ஒன்றாக நாம் கருதவேண்டும்.

3. மொழியை சிறப்பாகக் கற்பிக்க ஆசிரியர்க்கு மொழியியல் அறிவு

மொழியியல் என்பது மொழி பற்றிய முழுமையான செய்திகள் மொழியினுடைய தோற்றம் வளர்ச்சி பயன்பாடுக அனுபவங்கள் நுகர்வுகள் அதன் இலக்கண, இலக்கிய அறிவு, இலக்கிய நயம் உணர்தல், இதன் வாயிலாக மொழியின் மீது ஆர்வம் பற்று ஏற்படுத்திக் கொண்டு மாணாக்கர்கட்கு மொழியை கற்பித்து கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்பது திண்ணம்.

தோற்றமும் வளர்ச்சியும் : மொழியின் தோற்றம், மிகத் தொன்மையானது இனிமையானது, இளமையானது என்பது மொழி ஆசிரியர்கட்கு விளங்க வேண்டும். அப்போதுதான் அதன் மீது முழுமையான கவனம் செல்லும். மேலும் தேனுடைய வளர்ச்சி பல நூற்றாண்டுகளாக நன்கு வளர்ச்சி அடைந்துள்ளது என்பதை எங்ஙனம் பல வழிகளிலும் வளர்ச்சியுற்றது என்பதனையும் அறிந்து இருக்க வேண்டும். அப்போதுதான் மாணவர்களுக்கு முழுமையான உணர்வுடன் கற்றுக் கொடுக்க முடியும் என்பதும் திண்ணம்.

<u>இலக்கண அறிவு :</u> இலக்கணம் அறிந்தால்தான், இலக்கியம் அறிய முடியும் என்பது மொழி நூலாரின் கருத்தாகும். எனவே தமிழாசிரியர் தமிழில் இலக்கணமான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்திலக்கண அறிவு பெற்றவராய் இருத்தல் அவசியம். எழுத்தின் தோற்றம் பிறப்பு முறையை, சொல்லின் தோற்றம், புணர்ச்சி தொடர்கள், என்பன போன்ற யாவையும் அறிந்தவராயிருத்தல் அவசியம் ஆகும்.

<u>இலக்கிய அறிவு :</u> கதை, கட்டுரை, கவிதை, இயற்கை கற்பனை, அழகுணர்வு, நகைச்சுவை போன்ற பலவகையான திறன்களை உள்ளடக்கியது. இலக்கியம். எனவே இதன்மீது ஆர்வம் உண்டாக வேண்டும். அப்போதுதான் மாணவர்கட்கு கற்பிக்கும் போது முழு ஆர்வத்துடன் கற்பிக்க இயலும் எனவே இலக்கிய நயம் அறிதல் என்பது மிக மிக அவசியம மொழியாசிரியர்கட்கு.

<u>அனுபவங்கள் :</u> அனுபவங்கள் நுகர்வுகள், தமிழாசிரியருக்கு இருந்தால்தான், அந்த மொழி பற்று உண்டாகும். பற்றுதான் மற்றவர்கட்கு கற்பிக்கும் போதும் அதே உணர்வு வரவேண்டும். தான் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெற மனம் விழையும்.

<u>பயன்பாடுகள் :</u> மொழி கற்றால் இன்ன பலன்கள் அதாவது பண்பாடு, ஒழுக்கம், ஆக்க சிந்தனை, இறை உணர்வு, வாழ்க்கைப் பாடம், பிறருக்கு உதவும் நல்ல எண்ணம்,

என எல்லாம் பயன்பாடுகளாக அமையும் என்பதையும் ஆசிரியர் கற்ப்பிக்கும் போது அறிந்தால் மட்டுமே மாணவர்களும் உணர்த்த முடியும்.

இவ்வாறு மேறச்சொன்ன (அனைத்தும்) மொழியியல் கருத்துக்கள் முழுமையாக அறிந்தால் மட்டுமே சிறப்பாக கற்பிக்க முடியும். என நிறுபணமாகிறது.

4. தமிழ் மொழியின் தொன்மை

தமிழ் மொழி ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதாக கருதுகினற்ன. இதன் இலக்கண, இலக்கியங்கள் மிகவும் தொன்மை வாய்ந்ததாக கருதப்படுகிறது.

5. பிற மொழித் தாக்கம் தமிழ்மொழி கற்பித்தலை எங்ஙனம் பாதித்துள்ளது.

பிற மொழித் தாக்கம் தமிழ் கற்பித்தலை வெகுவாக பாதித்துள்ளது. தமிழ் இலக்கண, இலக்கியம் ஆங்காங்கே வடமொழியும் கலந்துள்ளது அறிய முடிகிறது. தூய தமிழில் சில ஒலி அமைப்புகள் அமையவில்லை. தமிழ் எழுத்துக்களோ வடமொழி ஓசையை சில இடங்களில் பெறுகிறது. அதனால் இலக்கண, இலக்கியங்கள் பெரும்பாலும் தாக்கம் காணப்படுகிறது. அதுபோலவே ஆங்கில வார்த்தைகள் தற்போது அதுவே தமிழ் வார்த்தை போலவே பழகிவிட்டது.

இவ்வாறு ஆங்கில வார்த்தைகள் மிகுதியாக தமிழ் வார்த்தைகளோடு கலந்துவிட்டன. தமிழில் சொன்னால் புரியமாட்டேங்கிறது என்று சொல்லும் அளவிற்கு பிறமொழி தமிழ்மொழியோடு தாக்கம் ஏற்பட்டுள்ளத அறியப்படுகிறது.

6. பள்ளி மாணவர்களிடம் மொழி ஆர்வத்தை வளர்க்க கையாளும் உத்திகள;

பள்ளி மாணவர்கள் மொழி ஆர்வத்தை அதிகரிக்க வளர்க்க அம்மொழி எங்ஙனம் உறுதுணையாக (வாழ்க்கைக்கு) அமைகிறது என்பதை புரிய வைக்க வேண்டும்.

<u>மொழியின் இன்றியமையாமை :</u> மக்கள் வாழ்க்கையில் அனைத்து வகையிலும் பயன்படும்படி மொழி அமைகிறது. உணர்ச்சிகள் நிறைவு பெறத் தெளிவாக விவரிப்பதற்கும் சொற் பொழிவுகள் கட்டுரை எழுதுவதற்கும், அறிவியல் ஆராய்ச்சிக்கும், இலக்கண இலக்கியங்களை படித்து இன்புறுவதற்கும், அன்றாட வாழ்வில் அனைத்து அலுவலகம் மற்றும் அனைத்து நிலைகளிலும் பயன்படுகிறது என்று கூறி மொழி ஆர்வத்தை வளர்க்க வேண்டும்.

<u>சிந்தனையை வளர்த்தல் :</u> சிந்தனையற்ற செயல் திறன் அடைவதில்லை இதனைக் கருத்தில் கொண்டே திருவள்ளுவர்

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

சிந்தனை என்பது உள்ளது. நிலைக்கின்றதொரு செயலாகும். முன் அறிந்ததை நினைவுக்கு கொண்டுவருதல், சொல்வதைக் கேட்டு அறிந்து கொள்ளுதல். எண்ணத் தொடர்பை குறிக்கும் சொற்கள் பொறுமை சொற்கள் அதை சார்ந்த சொற்கள் என பலவாறு அமைவது உண்டு. இவற்றை சிந்தித்தல் மூலம் பல்வேறு திறன்களை மொழியார்வத்தின் வாயிலாக சிந்தனை அவசியமாகிறது.

எண்ணத்தை வெளியிடும் கருவி : தாய்மொழியின் மூலமாகத்தான் நம் எண்ணத்தையும் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் சிறந்த முறையில் தெளிவாக்க இயலும். இதற்கு மொழி ஆர்வமும் வளர்ச்சியும் உறுதுணையாகும். நமது எண்ணத்தை தெளிவாக தவறின்றி வெளியிடல் என்பது மொழி நன்கு அறிந்திருக்க வேண்டும்.

நுகர்வுகளை எடுத்தியம்பல் : அனுபவித்த ஒன்றை மற்ற அனைவர்க்கும் எடுத்துக் கூறுதல் சிறப்பன்றோ. அதையே மொழி வாயிலாக எடுத்துச் சொல்லுதல் எடுத்துக்காட்டாக சுற்றுலா சென்றல் நாம் அங்கே கண்ட பேசிய விவரங்களை இங்கே மற்ற மாணவர்கட்கு எடுத்து இயம்பல், நல்ல விஷயங்கள் ஏதுவாகிலும் அதை மற்றவர்களிடம் பகிர்ந்தளித்தல் சிறப்பான ஒன்று.

அறிவுக் களஞ்சியங்கள் : அறிவுக் களஞ்சியங்கள் அறிந்து கொள்ளல். மொழி பேசும் மக்கள் தம்திறமைக்கு ஏற்ப நிறைய கருத்துக்களை தெரிவிப்பார்க்ள. அது அறியாதவர்க்ள மொழியினால் அறிந்து கொள்ளலாம். மேலும் இலக்கண இலக்கிய அறிவுக்களை நிறை பெறலாம். வர்த்தை ஜாலங்கள், என்பார்கள். ஒருவர் சிறப்பாக பேசி ஒரு செயல் வெற்றியடையச் செய்வார்கள் இதனின்று மொழி ஆர்வத்தை ஏற்படுத்தலாம்.

கற்பிக்கும் வாயிலாக : கற்றல் கற்பித்தல், நிகழ்வுகட்கு மொழி அவசியமாகிறது. நாம் நன்றாக கற்றுக் கொள்ளலாம். அதை மொழிப் புலமை இருப்பதால் மட்டுமே மற்றவருக்கு எளிமையாக மற்றும் இனிமையாக எடுத்துக்கூற இயலும். மற்றவர்கட்கு கற்பித்தல் என்று கொண்டால் சரளமாக மொழி அறிவு தேவை என்பதை புரியவைத்து மொழி ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும்.

மேற்கண்ட வழிகளில் மொழி ஆர்வத்தை மாணவர்களுக்கு ஏற்படுத்துவோம்.

## Unit 2

1. ஒலி உறுப்புகள் யாவை அவற்றின் செயல்பாடுகள்

ஒலி உறுப்புகள் என்பன உதடு, நாக்கு அன்னம், இவைமுறையே கீழ் இதழ், மேலிதழ், நுணிநா, இடைநா, கடைநா, மேலண்ணம், கீழண்ணம், நா விளிம்பு, என்ற உறுப்புகள் ஆகும். இதில் இதழ் குவிதல் விளித்தல் ஒன்றன் மேல் ஒன்று அமுக்குதல், என்ற முயற்சியும், நாக்கின் முயற்சியாக நுணிநா வருடல், நாவிளிம்பில் அடுக்குதல். தடவுதல், ஒட்டுதல் என்ற முறையில் முயற்சி அமைகிறது. அன்னத்தின் முயற்சியாக அங்காத்தல், மேல் கீழ் ஒட்டுதல், அசைதல், முயற்சியாக அமைகிறது.

1. சமுதாய வளர்ச்சிக்கு மொழியின் பங்கு இன்றியமையாதது. செய்தியை அறிவுறுத்தல், பகிர்ந்து கொள்ளுதல்,கற்பனை, சிந்தனை,நயம் உணர்தல்,
   புதியன படைத்தல் இவைகள் சமுதாயத்திற்கு மொழியின் பயன்பாடு.
2. மொழி சமூக சூழலுக்கு ஏற்றவாறு வளைந்து கொடுக்கும். மதுரை, கோவை,
தஞ்சை, சென்னை இவற்றின் வட்டார மொழி வழக்குகள் வேறுபடும் விதம்.

3. மொழி எவ்வாறு உபயோகப்படுத்துகிறோம் அதனுடைய உறவு முறை வேறுபாடு சமூகம் ஏற்றுக்கொள்ளும் நிலை.

4. மொழியின் இனங்கள் சமுதாயம் வாயிலாக, இட அமைப்பு வாயிலாக, இலக்கணம் வாயிலாக, பிறமொழி தாக்கம் வாயிலாக, இலக்கியம் வாயிலாக, இவ்வாறு பல்வேறு இனங்கள் மொழில் உள்ளன.

5. வட்டார மொழி – ஒரு வட்டாரத்தில் ஒரு குழு சார்ந்த மக்களால் பேசப்படுவது ஆகும். ஊதா மலை வாழ் மக்கள், மீனவ மக்கள் காட்டுவாசிகள், நகரத்தார்கள், குடிசைவாசிகள் என பல வகை வட்டார மொழிகள் உள்ளன.

6. மொழியின் உளப்பாங்கு – எண்ணத்தை வெளியிடும் கருவி, செய்தியை பரிமாற கற்பனை செய்ய, சிந்தனை செய்ய, நயம் அறிய, புரிந்து கொள்ள எளிமை தெளிவு இவை அனைத்தும் மொழியினால் முடியும். இவற்றில் தாய்மொழி, பிறமொழி பயன்பாடு வேறுபடுகிறது.

7. உளவியல் அடிப்படையில் மொழி – எண்ணத்தை வெளியிடும் கருவி செய்தியை பரிமாற, கற்பனை செய்ய, நயம் அறிய, புரிந்து கொள்ள எளிமை தெளிவு இவை அனைத்தும் மொழியினால் முடியும், மொழி கற்றலின் நோக்கங்கள், குழந்தை முதல் படிப்படியாக மாணவர்கள் கற்றல் கற்பித்தல் உளவியல் வாயிலாக மன வளர்ச்சி, உடல் வளர்ச்சி அவசியம்.

8. மொழிதொடர்பான கற்றல் – கொள்கை – அடிப்படை – தூண்டல் – அவசியம் – ஸ்கின்னர். பாவலோ இவர்களின் கற்றல் கொள்கை தூண்டல் – துஷ்ங்கள் செயல்வழிக் கற்றல் பயன்வழிக் கற்றல் மற்றும் சுய கற்றல் என பல்வேறு அறிஞர்களின் கற்றல் கொள்கைகள் ஆகும்.

9. மொழி தொடர்பான அறிவுத்திறன் கூறுகள்– கவனம், புலன் கவர்ச்சி, கற்பனை போன்றவையாகும். கற்பனை – மொழிப்பாடம்.

10. மொழி கற்றலின் நோக்கங்கள் – அடிப்படைக் கருத்துக்களை – கவனம், கவர்ச்சி, பேசுதல், எழுதுதல், படித்தல், கேட்டல் என பல்வேறு அடிப்படைக் கூறுகள்.

11. மொழியை சிறப்பாக கற்றலின் அடிப்படையில் பல்வேறு கூறுகள் –

    1. அடிப்படைத் திறன்களை வளர்த்தல், 2. இலக்கிய நயமுனர்தல்
    3. சிந்தனையை வளர்த்தல், 4. சொற்கலைஞ்சியத்தை பெறுக்குதல்,
    5. எண்ணத்தை வெளியிடல், 6. படைப்பாற்றலை வளர்த்தல்,
    7. வாழ்க்கை நுகர்வுகளை இயம்பல் 8. கற்பனைத் திறனை வளர்த்தல்,
    9. மக்கள் பயன்பாட்டை அறிதல், 10. ஒழுக்க உயர்வை வலியுறுத்தல்,
    11. நாட்டுப்பற்று, மொழிப்பற்று 12. இறை உணர்வினை ஊட்டல்,
    13. சமூக பண்பாட்டு மரபினை அறிதல்,

ஊக்குவித்தல் – குறியீடுகள், மொழிப்பாடம் – கற்றல் கொள்கையில் சிறப்பிடம் பெறுகிறது.

மேற்சொன்ன தலைப்புகள் கட்டுரை வினா தந்து தேர்வு நடத்துவது.

*12.* பள்ளிகளில் தமிழ் கற்பிப்பதன் பொது நோக்கத்தினை விவரி?

பள்ளிகளில் தமிழ் கற்பித்தலின் பொது நோக்கங்கள் பல திறன்களை வளர்த்தல், இலக்கிய நயமுடன், சிந்தனையை வளர்த்தல், சொற்களஞ்சியத்தை பெருக்குதல், எண்ணத்தை வெளியிடல்ர, படைப்பாற்றலை வளர்த்தல், வாழ்க்கை நுகர்வுகளை எடுத்து இயம்பல், கற்பனைத் திறனை வளர்த்தல், மக்கள் பண்பாட்டை அறிதல் ஒழுக்க உயர்வை வலியுறுத்தல், நாட்டுப்பற்று, மொழிப்பற்றை ஏற்படுத்துதல். இறை உணர்வினை ஊட்டல் சமூக பண்பாட்டினை மரபினை அறியும் கருவி என இவையாவும் பொது நோக்கங்களாக அமையும். இவற்றை வரிசையாகக் காண்போம்.

திறன் வளர்த்தல் : அடிப்படை திறன்களாக பேசுதல், எழுதுதல், படித்தல், கேட்டல், என இவை கல்வியை உள்வாங்குதல் வெளியிடல் என இருவகையிலே அமைகிறது. இவை மொழி கற்பித்தலுக்கு கற்றலுக்கும் அவசியமாகிறது.

இலக்கிய நயமுணர்தல் : இலக்கிய அறிவு மிகுதியாக ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு இலக்கியத்தின் சுவையும் மிகுதியாக மாணவர்கள் உணரும் வண்ணம் ஏற்படுத்த வகை செய்ய வேண்டும்.

சிந்தனையை வளர்த்தல் : சிந்தனை என்பது முன்பு படித்த கருத்திலிருந்து புதிய சிந்தனை தோற்ற, வழிபிறக்கிறது. பல பார்த்த கேட்ட செய்திகளில் இருந்து நமது சிந்தனைகளை ஒப்பிட்டு பார்க்க இலக்கிய இலக்கண அறிவு வளர்க்க வேண்டும். அதன்மூலம் மொழி ஆர்வம் மேலோங்கும் இங்ஙனம் சிந்தனை தூண்ட பள்ளிகள் மொழி பயிற்ற வேண்டும்.

சொற்களஞ்சிய பெருக்கம் : சொற்கள் மிகுதியாக பேச, எழுத, படிக்க, வேண்டும் என்ற நோக்கில் சொற்களை பயன்படுத்த வேண்டும். பொருள் அறிய வேண்டும். புதுப்புது சொற்களை உருவாக்க வேண்டும். இவ்வாறு சொற்களஞ்சியத்தை பெருக்க வழிவகுக்க வேண்டும்.

எண்ணத்தை வெளியிட : எண்ணம் என்பது நமது முழுமையான கல்வியறிவை பற்றி நாம் என்ன நினைக்கிறோம். புரிந்து கொண்டோமோ அதை மற்றவர்களிடம் எளிமையாக வெளியிடும் நிலையில் சிறந்த கருவியாக மொழி பயன்படுகிறது.

படைப்பாற்றல் வளர்த்தல் : படைப்பாற்றல் என்பது கற்றலிருந்து புதிதாக ஒன்றினை (புடைத்தல்) உருவாக்குதல் என பொருள்படும் எனவே இலக்கிய, இலக்கண அனுபவத்தைக் கொண்டு புது மாதிரியான இலக்கியம் படைக்க வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும்.

வாழ்க்கை நுகர்வுகளை : அன்றாட வாழ்க்கை நுகர்வுகளை எடுத்து கூறுதல் தமிழ் மொழி பயிற்சி அவசியம் தேவைப்படுகிறது. அப்போதுதான் உள்ளதை உள்ளவாறு நம்மால் மற்றவர்கட்கு எடுத்துக் கூற இயலும் அந்த திறமை வளர்த்துக் கொண்டால் நம்மிடம் மொழிப்புலமை மேம்படுகிறது எனலாம்.

கற்பனைத்திறன் : தன்னிடம் உள்ள கருத்திலிருந்து மேலும் சில உயர்ந்த கற்பனையில் நாம் இருக்க வேண்டும். இது ஆக்கக் கற்பனை அறிவுசார் கற்பனை என பல வகைப்படும்.

இந்த கற்பனை நாளை செயல்வடிவம் பெறும்போது மகிழ்ச்சி அளிக்கும். எனவே கற்பனைத் திறனை வளர்க்க வேண்டும்.

மக்கள் பண்பாடு : தமிழ் மொழி இலக்கண, இலக்கியம் மக்களுக்கு மொழி அறிவை வளர்ப்பதோடு மட்டுமில்லாது வாழ்வியல் கருத்துக்களை அளித்து பண்பாட்டுடன் நடந்து கொள்ள தமிழ்மொழி வாப்பளிக்கிறது. பண்பாடு என்பது மாறாத ஒன்று நாகரிகம் என்பது காலத்துக்கு காலம் மாறக் கூடியது. எனவே மாறாத தன்மை கொண்ட பண்பாட்டை முழுவதுமாக நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

முடிவுரை : இவ்வாறாக பொது நோக்கங்கள் நிறைவேற பள்ளிகள் தமிழ் கற்பிக்க வேண்டியுள்ளது அவசியமே என்பதை தெளிவாக்குகின்றன.

## Unit 3

**1.** எழுத்துத் தமிழில் காணப்படும் பிழைகள்

எழுத்துத் தமிழில் காணப்படும் பிழைகள் சந்திப்பிழை, குறில் நெடில் பிழைகள், மேலும் ற,ர,ண,ன,ந மயக்கம் ள,வ,ழ மயக்கம் போன்ற பிழைகள் ஏற்படுகின்றன.

2. பேச்சுத் தமிழில் காணப்படும் குறைகள் .

1) கொச்சையாக பேசுதுல் முதல் பிழையாகும்.
2) மரியாதை சொல் இன்றி பேசுதல் தவறாகும்.
3) வாய் தடுமாற்றம் மிகவும் நீக்கப்பட வேண்டியது.
4) எளிமையாக பேசத் தெரியாதது குறைபடும்.
5) விரைவாகப் பேசுதல் தவறாகும்
6) மிகவும் நிதானமாக பேசுதலும் தவறாகும்
7) முன்னுக்கு பின் முரணாக பேசுதலும் தவறாகும்.
8) சொல், பொருள் மயக்கம் தோன்ற பேசுதல்
9) மற்றவர்கட்கு எரிச்சலூட்டும் வண்ணம் பேசுதல்
10) சிலவார்த்தைகளை விழுங்கிவிட்டு பேசுதல்
11) தூய மொழி பேசாதிருத்தல்
12) அன்னிய மொழி கலந்து பேசுதல்

இவைகள் யாவும் குறைகள் ஆகும்.

3. எழுத்து மொழிக்கும் பேச்சு மொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகள்

| பேச்சு மொழி | எழுத்து மொழி |
|---|---|
| 1. பேச்சு மொழியை ஆராய்தல் எளிதன்று. | எழுத்து மொழியை ஆராய்தல் எளிது. |
| 2. பேச்சு மொழி செவிக்கு மட்டுமே புலனாகி உடனே மறைந்துவிடும். | இது கண்ணுக்கு புலனாகக் கூடியது யாவரும் எளிதில் எழுதிக்காக்கக் கூடியது. |
| 3. செவி வழியாக இலக்கியம் நீடு வாழ்வதில்லை.<br>4. செவி வழியாக வருவன மாறுபடலாம். | எழுதப்படும் இலக்கியம் தலைமுறை தலைமுறையாக நிலைத்து நிற்பதால் பெருமதிப்பும் செல்வாக்கும் பெறுகிறது. |

| | |
|---|---|
| 5. பேசுவோர் தவிர வேறு யாரிடமும் கேட்டு உறுதிப்படுத்த முடியாது. | முதலில் ஏற்பட்டது மாறுபடாது.<br>மொழிக்குத் துணையாக நிகண்டுகள் அகராதிகள் இலக்கண நூல்கள் சிறப்புத் தேடித் தருகின்றன. |

4. பள்ளி மாணவர்களிடம் மொழி ஆர்வத்தை வளர்க்க நீவிர் கையாளும் உத்திகள;

பள்ளி மாணவர்கள் மொழி ஆர்வத்தை அதிகரிக்க வளர்க்க அம்மொழி எங்ஙனம் உறுதுணையாக (வாழ்க்கைக்கு) அமைகிறது என்பதை புரிய வைக்க வேண்டும்.

<u>மொழியின் இன்றியமையாமை :</u> மக்கள் வாழ்க்கையில் அனைத்து வகையிலும் பயன்படும்படி மொழி அமைகிறது. உணர்ச்சிகள் நிறைவு பெறத் தெளிவாக விவரிப்பதற்கும் சொற் பொழிவுகள் கட்டுரை எழுதுவதற்கும், அறிவியல் ஆராய்ச்சிக்கும், இலக்கண இலக்கியங்களை படித்து இன்புறுவதற்கும், அன்றாட வாழ்வில் அனைத்து அலுவலகம் மற்றும் அனைத்து நிலைகளிலும் பயன்படுகிறது என்று கூறி மொழி ஆர்வத்தை வளர்க்க வேண்டும்.

<u>சிந்தனையை வளர்த்தல் :</u> சிந்தனையற்ற செயல் திறன் அடைவதில்லை இதனைக் கருத்தில் கொண்டே திருவள்ளுவர்

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

சிந்தனை என்பது உள்ளது. நிலைக்கின்றதொரு செயலாகும். முன் அறிந்ததை நினைவுக்கு கொண்டுவருதல், சொல்வதைக் கேட்டு அறிந்து கொள்ளுதல். எண்ணத் தொடர்பை குறிக்கும் சொற்கள் பொறுமை சொற்கள் அதை சார்ந்த சொற்கள் என பலவாறு அமைவது உண்டு. இவற்றை சிந்தித்தல் மூலம் பல்வேறு திறன்களை மொழியார்வத்தின் வாயிலாக சிந்தனை அவசியமாகிறது.

<u>எண்ணத்தை வெளியிடும் கருவி :</u> தாய்மொழியின் மூலமாகத்தான் நம் எண்ணத்தையும் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் சிறந்த முறையில் தெளிவாக்க இயலும். இதற்கு மொழி ஆர்வமும் வளர்ச்சியும் உறுதுணையாகும். நமது எண்ணத்தை தெளிவாக தவறின்றி வெளியிடல் என்பது மொழி நன்கு அறிந்திருக்க வேண்டும்.

<u>நுகர்வுகளை எடுத்தியம்பல் :</u> அனுபவித்த ஒன்றை மற்ற அனைவர்க்கும் எடுத்துக் கூறுதல் சிறப்பன்றோ. அதையே மொழி வாயிலாக எடுத்துச் சொல்லுதல் எடுத்துக்காட்டாக சுற்றுலா சென்றல் நாம் அங்கே கண்ட பேசிய விவரங்களை இங்கே மற்ற மாணவர்கட்கு எடுத்து இயம்பல், நல்ல விஷயங்கள் ஏதுவாகிலும் அதை மற்றவர்களிடம் பகிர்ந்தளித்தல் சிறப்பான ஒன்று.

<u>அறிவுக் களஞ்சியங்கள் :</u> அறிவுக் களஞ்சியங்கள் அறிந்து கொள்ளல். மொழி பேசும் மக்கள் தம்திறமைக்கு ஏற்ப நிறைய கருத்துக்களை தெரிவிப்பார்க்ள. அது அறியாதவர்க்ள மொழியினால் அறிந்து கொள்ளலாம். மேலும் இலக்கண இலக்கிய அறிவுக்களை நிறை பெறலாம். வர்த்தை ஜாலங்கள், என்பார்கள். ஒருவர் சிறப்பாக

பேசி ஒரு செயல் வெற்றியடையச் செய்வார்கள் இதனின்று மொழி ஆர்வத்தை ஏற்படுத்தலாம்.

கற்பிக்கும் வாயிலாக : கற்றல் கற்பித்தல், நிகழ்வுகட்கு மொழி அவசியமாகிறது. நாம் நன்றாக கற்றுக் கொள்ளலாம். அதை மொழிப் புலமை இருப்பதால் மட்டுமே மற்றவருக்கு எளிமையாக மற்றும் இனிமையாக எடுத்துக்கூற இயலும். மற்றவர்கட்கு கற்பித்தல் என்று கொண்டால் சரளமாக மொழி அறிவு தேவை என்பதை புரியவைத்து மொழி ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். மேற்கண்ட வழிகளில் மொழி ஆர்வத்தை மாணவர்களுக்கு ஏற்படுத்துவோம்.

## Unit 4

1. மொழி வளர்ச்சிக்காக சுற்றுப்புறச் சூழலின் பங்F

மொழி வளர்வதற்கு சுற்றுபுறம் நம்மைச்சுற்றி உள்ளவர்கள், மொழி அறிந்தவர்களாக அமையவேண்டும். அவர்களிடம் ஆர்வம் மிக்கவர்கள் நமக்கு உறுதுணையாக இருப்பார்கள் வட்டார வழக்கில் மிகுதியில்லாமல் தூய தெளிவான மொழி நடை பேசுவோர் அதிகம் இருப்பவராயின் நமக்கும் நன்மை வளரும் சான்றோர் நிறைந்த நாடு (ஊர்) செழிக்கும் என்பது பழமொழி. அதுபோல் சுற்றுப்புறச் சூழல் மொழி வளர்ச்சிக்கு பெரிதும் துணை செய்கின்றது.

2. சமூகவியல் அடிப்படையில் மொழிகற்றல்

சமூகம் என்பது படித்த மாணவர்கள் சமுதாய மக்களிடம் இருந்து அன்றாட நிகழ்வுகளோடு இயைபு உடையதாக அமையும். ஒவ்வொரு குறிப்பிட்ட சமுதாயத்தார் பேசும் வழக்கு வட்டார வழக்கு, உறவுமுறையில் மாற்றம், பல்வேறு ஜாதி மக்களின் வேறுபாட்டில் மொழியின் மாற்றம், சமூகப் பின்னணியில் மொழியில் பல்வேறு மாறுபாடு காணமுடிகிறது. உறவில் தாய்வழி உறவினர்கட்கு (வழிபிறந்து) வேறு பெயர்கள், தந்தை வழிபிறந்த உறவினர்கட்கு வேறு பெயர்கள் என மாமா ஆங்கிலத்தில் ஒரே வார்த்தைதான். ஒவ்வொரு இனப்பிரிவுகளும் அவர்கட்கு ஏற்ற தொழிலுக்கு ஏற்ற பல்வேறு சொற்களை உருவாகும். பால் வேறுபாட்டினாலும் மொழி வேறுபாடு அடைகிறது. அமைச்சர். விதவை போன்ற சொற்கட்கு எதிர்பால் அமையவில்லை, மொழியும் இயற்கைச் சுழலும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாலை. எஸ்கிமோ மக்கள் அவ்வழிச்சுழலில் ஏற்ப சொல்வளம் மிகும். இவ்வாறு மொழி சமூக அடிப்படையில் பல்வேறு மாற்றத்தை தரும் என்பது திண்ணம்.

3. விதி விளக்குதல் முறையில் இலக்கணப்பாடம்

மாணவர்களே எளிதில் கண்டுணர முடியாத விதிகளை ஆசிரியர் விதிவிளக்கு முறையில் கற்பிக்கலாம். இலக்கண விதியொன்றைக் கூறி அதனை பல எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குதல் விதிவிளக்குமுறை எனப்படும். இம்முறையே பழங்காலத்தில் இலக்கணம் கற்பித்தலில் பின்பற்றப்பட்ட முறை மெய்யற்றுப்புணர்ச்சியில் ண, ன, க.,

ஈற்றுப்புணர்ச்சிகளைக் கூறும் விதி, ண, ன வல்லினம் வரட்டரவு, பிறவரின் இயல்புமாகும் வேற்றுமைக்கு அவ்வழிக்குள் அனைத்து மெய்வரினும் இல்பாகுமே.

எ.கா: வல்லினம் – மண் + குடம் மண்குடம். பொன் + குடம் – பொற்குடம்

வேற்றுமையுணர்ச்சி மெய், இடை – மணல் + மலை – மண்மலை, பொன் + வன்னம் – பொன்வன்னம் ஆய்வறிசில் பொன் சிறந்தது : விண் சிறந்தது இவ்வாறு விதிவிளக்கமுறையில் சிறப்பாக விளக்கமுடியும்.

4. *மொழியை கற்றுக் கொள்வதில் பங்குபெறும் தேவை, ஆர்வம் ஊக்குவித்தல் ஆகிய கூறுகள்;*

மொழியைக் கற்றுக் கொள்வதில் நிறை கூறுகள் உட்கூறுகள் பங்கு பெறும் துணைச் செய்கின்றன. அதில் முக்கியமாக தேவை, ஆர்வம், ஊக்குவித்தல் என்ற இவை மூன்றும் ஒன்றோடு ஒன்று தொடர்பு உடையவை.

*தேவை :* தேவை என்பது மாணவர்கட்கு எந்த வகுப்பிற்கு எந்த அளவிற்கு திறன்கள் கற்பிக்கப் பயன்களாக திறன்கள் தேவை. எனவும் அறிவுக்களஞ்சியங்கள் மேம்படுத்த வேண்டும் எனவும் நாம் கருத்தில் கொண்டு மொழிப் பாடத்திட்டத்தை தயாரிக்க வேண்டும். பள்ளிகளின் நிலை உயர்நிலை, இடைநிலை, தொடக்கநிலை என யாவற்றிற்கும் ஏற்ப எது தேவை எது என அறிந்து பாடத்திட்டம் அமைப்பினை மனதிற்கொண்டு செயல்பட்டால், மாணவர்கட்கு ஏதுவாக அமையும். இந்த தேவை என்ற எண்ணம் மாணவனுக்கு மனதில் புரியவேண்டும். கற்றுக் கொள்வது அவசியம் என்று தோன்றும். கற்பதன் பயன் இன்னது என்றும் அறியச் செய்தால் தேவையை உணருவான். எனவே கற்றுக் கொள்வதில் தேவை என்ற அடிப்படை கூறுகள் முக்கியத்துவம் வாய்க்கிறது.

*ஆர்வம் :* ஆர்வம் என்பது மாணவர்களிடம் இன்ன பாடத்தை கற்க வேண்டும் என்ற ஆர்வம் மேம்பட வேண்டும். இவ்வகையில் மாணவர் ஆசிரியர் இந்த இரு நிலைகளிலும் (கற்பித்தல், கற்றல்) ஆர்வம் தேவைப்படுகிறது. மேலும் பாடத்திட்டமும் மாணவனின் மனத்திற்கு ஆர்வத்தை ஏற்படுத்த வல்லனவாக அமைதல் வேண்டும். ஆசிரியர் பாடம் நடத்தும் விதம் தன்சுய ஆர்வம் மிகுதியுடன் நடத்தும்போது பாடம் கற்றுக் கொள்ளும் ஆர்வம் மாணவர்கட்கு மிகுகிறது. இவ்வாறாக ஆர்வம் என்பது பாடப்புத்தகம், கற்றல் கற்பித்தல், என மூன்று நிலைகளும் உறுதுணையாக அமைதல் வேண்டும். அவ்வாறாயின் ஆர்வம் கற்றுக் கொள்வதில் முக்கிய கூறாக அமையும் என்பதில் ஐயமில்லை.

*ஊக்குவித்தல் :* பாடம் நடத்தும் போது மாணவர்கட்கு புரிந்ததா என்பதை அறிய வினா கேட்டு விடை வரவழைக்கும் போது அவன் கூறியபதில் முழுதும் சரியாக இருந்தால் அதிகபட்ச பாராட்டுதலை தெரிவித்து உற்சாகப்படுத்த வேண்டும். பாதி பதில் தந்தாலும் ஊக்குவித்தல் அடிப்படையில் வரவழைக்க வேண்டும். இவ்வூக்குவித்தல்

1) கைத்தட்டுதல் (மாணவர் அனைவரும்) 2) வார்த்தைகளால் பாராட்டல் (ஆசிரியர்)
3) மாணவனை தட்டிக் கொடுத்தல் 4) தலை அசைத்து ஏற்புடைமையை காட்டல்

5) பரிசுப்பொருட்களை தருதல் என பலவகையாக ஊக்குவித்தல் அமைகிறது. இதனை ஏற்ற இடத்தில் உபயோகப்படுத்தினால். கற்றுக்கொள்வதற்கு உற்ற கூறுகளாக அமையும்.

5. ஒலி நூலார் கொள்கைப்படி தமிழ் மெய் எழுத்துக்களை எங்ஙனம் வகைபடுத்துவார்? ஒலியியலார் மெய் எழுத்துக்களை இருவகையாக பிரிப்பர். 1) குரல் நானத்தில் அதிர்வு ஏற்பட பிறக்கும் ஒலி. 2) அதிர்வு ஏற்படாமல் பிறக்கும் ஒலி என இருவகையாக பிரிப்பர். உதாரணம்: அங்கு, தங்கு, பங்கு போன்ற சொற்களில் வரும் ககரம் அதிர்வு ஏற்பட பிறக்கும் ஒலியாகும். கம்பி, கட்டு போன்ற சொற்களில் ககரம் அதிர்வு இல்லாமல் பிறக்கும் ஒலிகளாகும்.

மற்றொரு வகை தடை செய்யப்பட்ட ஒலி திடீர் என்று விடுவிக்கப்பட்டால் அது ஒரு வகை ஓசையுடன் பிறக்கின்றது. இதற்கு வெடிப்பொலி என பெயர். ப என்பதே உதாரணம் ப விற்கு மூச்சு நிறைய தடை ஒலி எனவும் அழைக்கின்றனர்.

இன்னொரு வகை ஒலிகள் முக்கொலிகள் ஆகும். காற்றுச் சவ்வைத் தாண்டி வரும் மூச்சு வாய்வழியே வராது மூக்கு வழியாக போவதால் முக்கொலிகள் பிறக்கின்றன. லகர ஒலி, இவ்வொலி பிறக்குங்கால் மூச்சு. நாவின் மேற்புறமாக பக்கவாட்டில் சிதறிபிறக்கின்றது. ர கர ஒலி காற்று சவ்வுக்கு மேலே இருக்கின்ற உறுப்புகள் அதிர்வால் பிறக்கின்றன. வருடொலி என்பது மிகவும் குறைந்த கால அளவில் உண்டாகப் பெறும். ஒரு வகை ஒலியாகும். இதனை ஒரு நொடியில் உண்டாகும் தடையொலி என கூறலாம். அன்னத்தை நா வளைந்து தடவுவதால் இவ்வொலி உண்டாகிறது. படம் என்னும் சொல்லில் ட வருடொலியாகும். சுருங்கக் கூறினால் மொழியியலார் ஒலிகள் பிறக்கும் இடங்களான இதழ், இதழும் பல்தம், பல், பல்லீறு வளைவு அன்னம், பின் அன்னம், குரல்வலை ஆகியவற்றைச் சுட்டியுள்ளர்.

1) தடையொலி – குரலில்லா தடையொலி, குரல் நிறை தடையொலி – ப / க

2) உரசல் தடையொலி – குரலில்லா உரசல் தடை ஒலி, குரல் நிறை உரசல் தடையொலி – ச.

3) உரசல் ஒலி – குரலில்லா உரசல் ஒலி, குரல் நிறை உரசல் ஒலி – ஸ

4) மூச்சொலி – ம, ங, ன 5) ர, கர ஒலி – ர்

6) வருடொலி – ட 7) அடை உயிரொலி – ப், வ்

ஒலியியலை தெளிவாகப் புரிந்து கொள்வது மொழி அசிரியரின் கடமையாகும். ஒலி மொழியின் ஆக்கத்திற்கு காரணமானது. மாணவர்களை பிழையின்றி தெளிவாக ஒலிக்கச் செய்தல் வேண்டும்.

ஒலியியலார் மெய்யொலிகளை இவ்வாறு பல வகைப்படுத்தியுள்ளனர். என்பதை அறிய முடிகிறது. இஃது யாவும் மொழியை மாணவர்கள் பிழையின்றி பேசவும், எழுதவும் மொழி வளத்தை தனக்குள் மேம்படுத்தவும் உதவும் என்பது தின்னம்.

1. மொழியை கற்றுக் கொள்வதில் பங்குபெறும் தேவை, ஆர்வம் ஊக்குவித்தல் ஆகிய கூறுகள;

மொழியைக் கற்றுக் கொள்வதில் நிறை கூறுகள் உட்கூறுகள் பங்கு பெறும் துணைச் செய்கின்றன. அதில் முக்கியமாக தேவை, ஆர்வம், ஊக்குவித்தல் என்ற இவை மூன்றும் ஒன்றோடு ஒன்று தொடர்பு உடையவை.

தேவை : தேவை என்பது மாணவர்கட்கு எந்த வகுப்பிற்கு எந்த அளவிற்கு திறன்கள் கற்பிக்கப் பயன்களாக திறன்கள் தேவை. எனவும் அறிவுக்களஞ்சியங்கள் மேம்படுத்த வேண்டும் எனவும் நாம் கருத்தில் கொண்டு மொழிப் பாடத்திட்டத்தை தயாரிக்க வேண்டும். பள்ளிகளின் நிலை உயர்நிலை, இடைநிலை, தொடக்கநிலை என யாவற்றிற்கும் ஏற்ப எது தேவை எது என அறிந்து பாடத்திட்டம் அமைப்பினை மனதிற்கொண்டு செயல்பட்டால், மாணவர்கட்கு ஏதுவாக அமையும். இந்த தேவை என்ற எண்ணம் மாணவனுக்கு மனதில் புரியவேண்டும். கற்றுக் கொள்வது அவசியம் என்று தோன்றும். கற்பதன் பயன் இன்னது என்றும் அறியச் செய்தால் தேவையை உணருவான். எனவே கற்றுக் கொள்வதில் தேவை என்ற அடிப்படை கூறுகள் முக்கியத்துவம் வாய்க்கிறது.

ஆர்வம் : ஆர்வம் என்பது மாணவர்களிடம் இன்ன பாடத்தை கற்க வேண்டும் என்ற ஆர்வம் மேம்பட வேண்டும். இவ்வகையில் மாணவர் ஆசிரியர் இந்த இரு நிலைகளிலும் (கற்பித்தல், கற்றல்) ஆர்வம் தேவைப்படுகிறது. மேலும் பாடத்திட்டமும் மாணவனின் மனத்திற்கு ஆர்வத்தை ஏற்படுத்த வல்லனவாக அமைதல் வேண்டும். ஆசிரியர் பாடம் நடத்தும் விதம் தன்சுய ஆர்வம் மிகுதியுடன் நடத்தும்போது பாடம் கற்றுக் கொள்ளும் ஆர்வம் மாணவர்கட்கு மிகுகிறது. இவ்வாறாக ஆர்வம் என்பது பாடப்புத்தகம், கற்றல் கற்பித்தல், என மூன்று நிலைகளும் உறுதுணையாக அமைதல் வேண்டும். அவ்வாறாயின் ஆர்வம் கற்றுக் கொள்வதில் முக்கிய கூறாக அமையும் என்பதில் ஐயமில்லை.

ஊக்குவித்தல் : பாடம் நடத்தும் போது மாணவர்கட்கு புரிந்ததா என்பதை அறிய வினா கேட்டு விடை வரவழைக்கும் போது அவன் கூறியபதில் முழுதும் சரியாக இருந்தால் அதிகபட்ச பாராட்டுதலை தெரிவித்து உற்சாகப்படுத்த வேண்டும். பாதி பதில் தந்தாலும் ஊக்குவித்தல் அடிப்படையில் வரவழைக்க வேண்டும். இவ்வூக்குவித்தல்

1) கைத்தட்டுதல் (மாணவர் அனைவரும்) 2) வார்த்தைகளால் பாராட்டல் (ஆசிரியர்)

3) மாணவனை தட்டிக் கொடுத்தல் 4) தலை அசைத்து ஏற்புடைமையை காட்டல்

5) பரிசுப்பொருட்களை தருதல் என பலவகையாக ஊக்குவித்தல் அமைகிறது. இதனை ஏற்ற இடத்தில் உபயோகப்படுத்தினால். கற்றுக்கொள்வதற்கு உற்ற கூறுகளாக அமையும்.

இவ்வாறு மேற்கண்ட தேவை, ஆர்வம், ஊக்குவித்தல் யாவையும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாக அமைகிறது. மொழி கற்றலுக்கு முக்கிய கூறுகளாக அமைகிறது.

2. நாடு பின்பற்றும் மும்மொழிக் கொள்கை. அதன் நிறை குறைகள்

மும்மொழி என்பது, தமிழ், ஆங்கிலம், இந்தி என்ற மூன்றும் கற்றுத் தருதல். எங்கெல்லாம் நடைபெறுகிறதோ அதை மும்மொழிக் கொள்கை உடைய நாடு என கூறலாம். அவ்வாறாக நமது தமிழகத்தில் மும்மொழிக் கொள்கை கட்டாயமாக்கப்படவில்லை. இரு மொழி மட்டுமே கட்டாயமாக்கப்பட்டது. மூன்றாவது மொழியான இந்தி விருப்பப்பாடமாக யார் வேண்டுமானாலும் படிக்கலாம் என்பதே இம்மொழி CBSC நவோதையாபள்ளி, கேந்திர்ய வித்யாலாய பள்ளி ஆகிய பள்ளிகளில் விருப்பம் பாடமாக அமைந்துள்ளது. மேலும் இந்தி பிரச்சார சபா மூலமாகவும் கற்றுக் கொள்ளலாம். இவ்வாறு மும்மொழிக் கொள்கை இருந்தது.

3. பள்ளி மாணவர்களிடம் மொழி ஆர்வத்தை வளர்க்க நீவிர் கையாளும் உத்திகள; .

பள்ளி மாணவர்கள் மொழி ஆர்வத்தை அதிகரிக்க வளர்க்க அம்மொழி எங்ஙனம் உறுதுணையாக (வாழ்க்கைக்கு) அமைகிறது என்பதை புரிய வைக்க வேண்டும்.

<u>மொழியின் இன்றியமையாமை :</u>

மக்கள் வாழ்க்கையில் அனைத்து வகையிலும் பயன்படும்படி மொழி அமைகிறது. உணர்ச்சிகள் நிறைவு பெறத் தெளிவாக விவரிப்பதற்கும் சொற் பொழிவுகள் கட்டுரை எழுதுவதற்கும், அறிவியல் ஆராய்ச்சிக்கும், இலக்கண இலக்கியங்களை படித்து இன்புறுவதற்கும், அன்றாட வாழ்வில் அனைத்து அலுவலகம் மற்றும் அனைத்து நிலைகளிலும் பயன்படுகிறது என்று கூறி மொழி ஆர்வத்தை வளர்க்க வேண்டும்.

<u>சிந்தனையை வளர்த்தல் :</u> சிந்தனையற்ற செயல் திறன் அடைவதில்லை இதனைக் கருத்தில் கொண்டே திருவள்ளுவர்

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

சிந்தனை என்பது உள்ளது. நிலைக்கின்றதொரு செயலாகும். முன் அறிந்ததை நினைவுக்கு கொண்டுவருதல், சொல்வதைக் கேட்டு அறிந்து கொள்ளுதல். எண்ணத் தொடர்பை குறிக்கும் சொற்கள் பொறுமை சொற்கள் அதை சார்ந்த சொற்கள் என பலவாறு அமைவது உண்டு. இவற்றை சிந்தித்தல் மூலம் பல்வேறு திறன்களை மொழியார்வத்தின் வாயிலாக சிந்தனை அவசியமாகிறது.

<u>எண்ணத்தை வெளியிடும் கருவி :</u> தாய்மொழியின் மூலமாகத்தான் நம் எண்ணத்தையும் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் சிறந்த முறையில் தெளிவாக்க இயலும். இதற்கு மொழி ஆர்வமும் வளர்ச்சியும் உறுதுணையாகும். நமது எண்ணத்தை தெளிவாக தவறின்றி வெளியிடல் என்பது மொழி நன்கு அறிந்திருக்க வேண்டும்.

<u>நுகர்வுகளை எடுத்தியம்பல் :</u> அனுபவித்த ஒன்றை மற்ற அனைவர்க்கும் எடுத்துக் கூறுதல் சிறப்பன்றோ. அதையே மொழி வாயிலாக எடுத்துச் சொல்லுதல் எடுத்துக்காட்டாக சுற்றுலா சென்றல் நாம் அங்கே கண்ட பேசிய விவரங்களை இங்கே மற்ற மாணவர்கட்கு எடுத்து இயம்பல், நல்ல விஷயங்கள் ஏதுவாகிலும் அதை மற்றவர்களிடம் பகிர்ந்தளித்தல் சிறப்பான ஒன்று.

## Unit 6

1. ஆரம்ப நிலைக்குறிய தமிழ் பாடத்தி;lk;

மணலிலோ, கரும்பலகையிலோ கோடு வட்டம் கோளம் என கிறுக்கி பழகி குழந்தைக்கு எழுத்துக்களையும் சொற்களையும் தெரிந்துகொண்ட பின்னர் அதை பார்த்து எழுதும் பயிற்சியும், கேட்டு எழுதும் பயிற்சியும் தரவேண்டும்.

2. சுருக்கி வரைதலின் பயன்கள்

1) சுருக்கி வரைதல் என்ற திறனை கற்கின்றனர்.
2) பெரிய அளவில் உள்ளதை சிறிய அளவிலே சுருக்கி தேவையான போது பார்த்துக்கொள்ள முடியும்.
3) தேர்வு நேரத்தில் கைகொடுக்கும் சுருக்கக் குறிப்பு.
4) கருத்தினை சுருக்குவதால் காலம் (குறைவாக) உதவும்.

3. இன்றைய உயர்நிலை பள்ளித் தமிழ்பாடத் திட்டம் நிறைகுறைகள்

உயர்நிலை பள்ளித் தமிழ்பாடத்திட்டத்தில் மாணவர்கள் எந்த அளவு பாட அறிவு பெற்றிருக்க வேண்டும். எந்த திறன்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். எந்த திறன்களை வளர்த்திருக்க வேண்டும். என்று கல்வி ஏற்பாடு பொதுப்படக் கூறுகிறது. எந்த வகுப்பிற்கு ஏற்ப அறிவு பெற வேண்டும். அதற்கேற்ப பாட உள்ளடக்கததை பட்டியலிட்டு தருகின்றது. மொழிப்பாடம் திறன் பாடம் என்பதால் திறன்கள் அடிப்படையில் மாணவர் மொழித்திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் அவர்கள் பெற வேண்டிய மதிப்பீடு, தேர்வு முறை தருகின்றது. இவ்வாறு உயர்நிலை பாடத்திட்டம் அமைந்துள்ளது.

இலக்கணம் என்ற தனியாக பாடப்புத்தகம் அமைத்து அதில் எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என முறையாக ஐந்து இலக்கணம் அறியும் வண்ணம் மாணவர்கள் திறன் (இலக்கணத்திறன்) வளர வகைசெய்யும் விதத்தில் இலக்கணப்பாடம் அமைந்துள்ளது.

<u>நிறைகள் :</u>

1) உயர்நிலை பாடத்திட்டத்தில் போதுமான அளவு அனைத்து திறன்களும் வளரும் வண்ணம் அமையப்பட்டுள்ளது.
2) உரைநடை செய்யுள், துணைபாடம் இலக்கணம் இவையாவும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய செய்திகளாக அமையப்பெற்றமை மாணவர்கள் முழுமையான அறிவை பெற உதவும்.
3) பாடத்திட்டங்கள் யாவும் உயர்நிலைக்கு ஏற்றவாறு தாம் அமைந்துள்ளது.
4) கற்றல் கற்பித்தலுக்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளது.

<u>குறைகள் :</u>

1) பல வருடங்களாக ஒரே மாதிரி அமைப்பில் பாடத்திட்டம் அமைந்துள்ளது.
2) ஒன்றை படித்தபின்பு மேலும் அது சம்பந்தமான (தொடர்புடைய) புத்தகங்களை படிப்பதற்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதாக அமையவில்லை.
3) தற்போதைய ஆசிரியர்கள் அதை சரியான (பாடல்) வகையில் பாடுவது

கிடையாது.

4) மொழிப்பாடம் போதுமான அறிவைத், திறனை கொடுத்த போதிலும், நடைமுறையில் மாணவர்கள் திறம்பட செயல்பட வகை செய்வது குறைவாக அமைந்துள்ளது.

இவ்வாறு உயர்நிலை பாடதிட்டத்தில் தமிழ் மொழியின் நிலையும் நிறைவுகளும், குறைகளுமாக இங்கே தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

4. உரைநடை பாடம் கற்பித்தலின் நோக்கங்கள்

உரைநடை பாடம் கற்பிக்கும் போது அதன் நோக்கங்களாக கீழ்வருவணவற்றைக் கூறலாம்.

1) ஒலித்தல் முறையினை அறிதல், சொல், மரபு தொடர் பத்தி மரபுகளை அறிந்து தெளிவாக எழுத பழகுதல்.

2) மொழித்தூய்மை, சொல்லாட்சித் திறனை வளர்த்தல்

3) சொற்களஞ்சியப் பெருக்கம் அடைதல்

4) மரபுத் தொடர் அறிதல் பயன்படுத்துதல் 5) கருத்து வளம் உண்டாக்குதல்

6) வாய்விட்டு படித்தலில் பயிற்சி தொடர்பாகவும். பிழையின்றி பேசவும் எழுதவும் பழகுதல்.

7) நடைமுறை இலக்கணம் கற்றுக்கொள்ளவும் முடியும்.

என்ற நோக்கங்கள் நிறைவேற உரைநடைப் பயிற்றல் நல்லது.

5. தமிழில் செய்யுள் கற்பித்தலுக்கும் உரைநடை கற்பித்தலுக்கும் உள்ள வேறுபாடுகள்

| செய்யுள் | உரைநடை |
|---|---|
| செய்யுள் சிறும் தலையும் அடியும் கொண்டது. | இதரற்கு அவ்வாறு உறுப்புகள் கிடையாது. |
| ஒலி நயம் கொண்டது. சந்த நயம் ஏதுகை மோனை. | சந்த நயம் கிடையாது. அடுக்கு மொழி சொற்கள் உண்டு. |
| கற்பனை நிறைய காணப்படும். கவிதையில் | உரைநடையில் கற்பனை சிறக்காது. |
| உணர்ச்சிகள் அழகும் மிளிரும். | கருத்துக்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப்படும். |
| வர்ணனைகள் அணிகள் இடம் பெரும். | அனைத்தும் சொற்கள் வளமாக அமைக்கப்படும். |
| எதுகை நயம் மோனை நயம் செய்யுள் அமையும். | அடுக்குத் தொடர், மொழி அமையப் பெறும். |
| பொருள் சுவை நிறைந்ததாக காணப்படும். | கருத்து நிறைந்ததாக அமையும். |

6. துணைப்பாடம் கற்பித்தலின் நோக்கங்களைக் குறிப்பிடுக.

1) படிப்பில் ஆர்வமூட்டல் : துணைப்பாட நூல்களில் இடம் பெற்றுள்ள கதைக்ள, வரலாறுகள் ஆகியவற்றில் சிறு சிறு பகுதிகளைக் கூறிப் பிறவற்றை மாணாக்கரே படித்து அறியும்படி ஆர்வத்தைத் தூண்டலாம்.

2) பல்துறை அறிவினைப் பெறுதல் : கல்வி கரையில என்னும் தொடருக்கேற்ப நாள்தோறும் பலவிதமான அறிவியல் நூல்களும், கதை நூல்குளம், உலகச் செய்திகள்

பற்றிய நூல்களும் தேர்ந்தெடுத்து தொகுத்து எளிமையாக்கித் துணைப்பாட நூல்களாக அமைக்கலாம்.

3) தன்னம்பிக்கை வளர்த்தல் : ஆர்வத்துடன் நூல்களைப் படிப்பதாலும், பல்துறை நூல்களைப் படித்து அறிவு பெறுவதாலும், பலரது வாழ்க்கை வரலாறுகளைத் தாமே படித்துச் செய்தி அறிவதாலும் மாணாக்கர்களுக்குத் தன்னம்பிக்கை வளர்கின்றது.

4) வாய்க்குள் படிக்கும் திறன் வளர்த்தல் : தொடக்க நிலையில் மாணவர் எழுத்துகளைப் பார்த்து ஒலித்துப் படிக்கக் கற்றுக் கொள்கின்றனர்.

5) விரைவாகப் படிக்கும் திறன் வளர்த்தல் : துணைப்பாட நூலை வகுப்பில் கற்பிக்கும் பொழுது மாணாக்கர் வாய்க்குள் படிக்கின்றனர்.

6) மொழியறிவு வளர்த்தல் : மாணாக்கர் துணைப்பாட நூல்களில் புதிய கதைகளையும் வாழ்க்கை வரலாறுகளையும் அறிவியல் கண்டுபிடிப்புப் போன்ற பிற செய்திகளையும் படிக்கின்றனர். அவ்வப் பகுதிகளில் புதிய சொற்கள் பல இடம் பெறலாம். அவற்றை இடம் நோக்கிப் பொருள் அறிந்து மேலே படிக்கின்றனர். அல்லது அகராதி பார்த்துப் பொருளறிகின்றனர். ஆசிரியரைக் கேட்டு அறிகின்றனர். இதனால் அவர்களது சொற்களஞ்சியம் விரிவடைகின்றது. மொழியறிவு வளர்கின்றது. இவ்வாறு மொழியறிவு வளர்த்தல் துணைப்பாட நூலின் ஒரு நோக்கமாகும்.

7. கட்டுரை வகை தேர்வின் நன்மை தீமைகள் யாவை?

இதில் தொகுத்து அறியும் திறன், புரிந்து கொள்ளும் திறன் போன்றவை அளக்கப்படுகின்றன. ஒரு வினாவிற்கு நீளமான விடைகள் பத்தி பத்திகளாகப் பிரித்து எழுதுதல் வேண்டும். ஒரு பெரிய தலைப்பின் கீழ் சிறு சிறுதலைப்புகளும் விரிவாக்கப்படும். வயதுநிலைக்கேற்ப விடை எழுதும் அளவு மாறுபடும். எளிதில் பயன்படுத்தும் வகையில் உள்ள வினாக்கள் அடங்கும். கருத்துக்களைக் கோர்வையாக அமைக்கும் திறன், விமர்சனம் செய்யும் திறன், விளக்கம் கொடுக்கும் திறன் போன்றவற்றை அறிய உதவுகின்றது. இங்குள்ள வினாவிற்கு விடை எழுத நிறைப்படிக்க வேண்டும். கற்பனை வளத்தைப் பெருக்கவும், படிக்கும் ஆர்வத்தைத் தூண்டவும் பயன்படுகிறது. மொழிவளம் இதனால் கூடுகிறது. மொழித்திறனைப் பயன்படுத்த வாய்ப்பு கிடைக்கிறது. தகவல்களைச் தர்க்க ரீதியாக ஒழுங்குபடுத்தும் பழக்கம் ஏற்படுகிறது. மாணவர்களுடைய குறைகளை ஓரளவு அறிந்து கொள்ளலாம். வினாக்கள் தயாரிப்பது எளிதாக உள்ளது.

இம்முறையில் சில குறைகள் உள்ளன. மாணவர்களின் விடையை மதிப்பீடு செய்வதில் நம்பகத்தன்மை இருப்பதில்லை. ஆசிரியரின் சொந்த விருப்பு வெறுப்பு, மதிப்பெண் தருவதில் குறுக்கிட வாய்ப்பில்லை.

வினாத்தாளில் குறைந்த எண்ணிக்கையுள்ள கட்டுரை வினாக்கள் இடம் பெறுவதால் பாடத்திட்டத்தில் உள்ள அனைத்துப் பாடங்களிலும் வினாக்கள் தரமுடியாது. ஆகவே மாணவர்கள் ஒரு சில பாடங்களைப் படிக்காமல் ஒதுக்க வாய்ப்புண்டு.

சில சமயங்களில் மாணவர்கள் மனப்பாடம் செய்து எழுதவும் வாய்ப்புண்டு.

நடுநிலைப் பள்ளி மாணவர்கட்கு :

1) இரட்டைக் கொம்பு சேர்த்து சொல்லாக்குதல்.

2) சொற்களை முறைமாறி கொடுத்து வாக்கிமாக ஆக்குதல்.

3) எதிர்ச்சொல், சேர்த்து எழுதுதல், பிரித்து எழுதுதல்

4) அன்னியனைக் கண்டுபிடித்தல், வேறுபடுத்துதல்.

5) படம் ஒன்றைக்காட்டி ஏற்ற தலைப்பு தரச் சொல்லுதல்.

6) கதை அமைத்தல் , ஓர் ஒலியமைந்த சொற்கள் கூறுதல்.

7) விடுகதைகள் அமைத்து பதில் பெறுதல்.

இவ்வாறாக தொடக்க நிலை, இடைநிலை பள்ளி மாணவர்கட்கு விளையாட்டு முறையில் மொழியை கற்றுக் கொடுக்கலாம்.

நடிப்பு முறை : நடிப்பு முறை என்பது இடைநிலை உயர்ந்த மாணவர்களை ஏற்ற பாடத்திற்கு நாடகமாக பாத்திரமேற்று நடித்துக் காட்டுதல் நல்ல கற்றலை தரும். கற்பனை குழந்தைகட்கு ஏற்பட்டு தானும் நடித்து பலவற்றைக் கற்றுக் கொள்ளும். உதாரணமாக மரக்கட்டை, ரயில்வண்டியாக, நாற்காலியாக, கப்பலாக, சிறுவனோ, பால்காரன், கடைக்காரர் என்று நடிப்பதில் பேரார்வம் காட்டுவார்கள். அவ்வகையில் உயர்நிலை பள்ளி மாணவர்களுக்கு தேவையான பாடத்தை நடிப்பு முறையில் நடத்திக் கற்றுக் கொடுக்கலாம்.

8. நற்றமிழ் கற்பிக்கும் முறைகள் :

படையாமல் உண்ணாத தமிழ்நாடு வாழ்க
பகை யாரும் எண்ணாத தமிழ்நாடு வாழ்க
அடையாத துன்பங்கள் அவை வந்த போதும்
அநியாயம் எண்ணாத தமிழ்நாடு வாழ்க

– நாமக்கல் கவிஞர்

கவிஞர் அறிமுகம் : இப்பாடல் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்களால் பாடப் பெற்றது. தமிழ்நாட்டு மக்களின் சிறப்பு இயல்புகளையெல்லாம் கூறித் தமிழ்நாடு வாழ்க என வாழ்த்துகின்றனர்.

பொருள்நயம் : சில கருத்துக்களை எதிர்மறை முறையிலும், சிலவற்றை உடன்பாட்டு முறையிலும் கூறிக் கருத்துக்களை விளங்க வைக்கும் உத்தி சிறப்பாக உள்ளது. படையாமல் உண்ணாத பகை யாரும் எண்ணாத, அநியாயம் எண்ணாத என்று எதிர்மறையில் கூறி, அதனைத் தொடர்ந்து கொல்லாமை உயர்வு என்னும் உடன்பாட்டு முறையில் கருத்தைக் கூறுவது பொருள் நயம் சிறக்க வழிவகுத்துள்ளது.

சொல்நயம் : படையாமல் உண்ணாத தமிழ்நாடு என்னும் தொடருக்கு தாம் உழைத்துப் பொருள்களைப் படைக்காமல் மக்கள் உண்ணமாட்டார்கள் என்றும், உழைத்துப் பெற்ற பொருளை இறைவனுக்குப் படைக்காமல் உண்ணமாட்டார்கள் என்றும் இருபொருள் தரும் வகையில் சொல்லை அமைத்துள்ளனர்.

தொடை நயம் :

1) எதுகைத் தொடை : படையாமல் – அடையாமல் என முதல் இரண்டு அடிகளிலும், கொல்லாமை – இல்லாமை என இறுதி இரண்டு அடிகளிலும் எதுகைத் தொடை அமைந்துள்ளது.

2) மோனைத் தொடை : படையாமல் – பகை – என்றும் அடையாத – அநியாயம் என்றும் கொல்லாமை – கொடைவள்ளல் என்றும் இல்லாமை – இரவாமை என்றும் சீர் மோனைத் தொடை அமைந்துள்ளது.

3) இயைபுத் தொடை : ஒவ்வோர் அடியிலும் வாழ்க என இறுதிச் சொல் அமைந்திருப்பது இயைபுத் தொடை இயல்பாக அமைய வழி வகுத்துள்ளது.

4) சந்த நயம் : எதுகை, மோனை, இயைபு ஆகிய தொடை நயங்கள் அமையப் பெற்ற இப்பாடல், பொருள் நயம் நிறைந்து, வாய் விட்டுப் படிக்கும் பொழுது இனிய ஓசையைத் தருதலால் சந்த நயமும் அமையப் பெற்றுச் சிறந்து விளங்குகிறது.

9. விரிவுரை முறையின் நிறை குறைகS;

விரிவுரை மூலம் பெரும்பாலும் கல்லூரிகளில் நடத்தப்படுகிறது. இதன் நிறைகுறைகளைக் காண்போம்.

நிறைகள் : 1) விரிவுரை முறையில் கல்லூரி அளவில் மட்டுமே நடத்த முடிகிறது.

2) மாணவர்களை சற்று கூர்மையாக கவனிக்க இயலும்.

3) ஒன்றிற்கு சிறப்பான விளக்கம் அளிக்க இந்த விரிவுரை முறை சிறப்பாகும்.

4) ஆசிரியர்க்கும் இம்முறையில் நல்ல நிறைவு கிடைக்கும்.

குறைகள் :

1) ஆசிரியர் மட்டுமே பேசிக்கொண்டிருக்க மாணவர் அமைதியாக கேட்டவண்ணம் இருப்பர் இது மாணவர்கட்கு தூக்கத்தை ஏற்படுத்தும்.

2) குறிப்பிட்ட பகுதியில் ஆசிரியரின் கருத்துக்கள் மட்டுமே இடம்பெற வாய்ப்பு உள்ளது.

3) மற்ற முறைகள் போல மாணவர் மையம் என்பதில் பொருத்தம் குறைவாகவே இருக்கும்.

4) விளக்கம் மட்டுமே குறைந்த அளவு கவனம் இருப்பதாக உளவியல் வள்ளுனர்கள் கூறுகின்றனர்.

10. பள்ளிகளில் தமிழ் கற்பிப்பதன் பொது நோக்கk;

பள்ளிகளில் தமிழ் கற்பித்தலின் பொது நோக்கங்கள் பல திறன்களை வளர்த்தல், இலக்கிய நயமுடன், சிந்தனையை வளர்த்தல், சொற்களஞ்சியத்தை பெருக்குதல், எண்ணத்தை வெளியிடல்ர, படைப்பாற்றலை வளர்த்தல், வாழ்க்கை நுகர்வுகளை எடுத்து இயம்பல், கற்பனைத் திறனை வளர்த்தல், மக்கள் பண்பாட்டை அறிதல் ஒழுக்க உயர்வை வலியுறுத்தல், நாட்டுப்பற்று, மொழிப்பற்றை ஏற்படுத்துதல். இறை உணர்வினை ஊட்டல் சமூக பண்பாட்டினை மரபினை அறியும் கருவி என இவையாவும் பொது நோக்கங்களாக அமையும். இவற்றை வரிசையாகக் காண்போம்.

திறன் வளர்த்தல் : அடிப்படை திறன்களாக பேசுதல், எழுதுதல், படித்தல், கேட்டல், என இவை கல்வியை உள்வாங்குதல் வெளியிடல் என இருவகையிலே அமைகிறது. இவை மொழி கற்பித்தலுக்கு கற்றலுக்கும் அவசியமாகிறது.

கற்பனைத்திறன் : தன்னிடம் உள்ள கருத்திலிருந்து மேலும் சில உயர்ந்த கற்பனையில் நாம் இருக்க வேண்டும். இது ஆக்கக் கற்பனை அறிவுசார் கற்பனை என பல வகைப்படும். இந்த கற்பனை நாளை செயல்வடிவம் பெறும்போது மகிழ்ச்சி அளிக்கும். எனவே கற்பனைத் திறனை வளர்க்க வேண்டும்.

ஒழுக்க உயர்வை அறிதல் : கற்றோர்க்கு சென்றமிடமெல்லாம் சிறப்பு என்ற வாக்கிற்கு இணங்க கற்பதினால் ஒழுக்கம் மேலோங்குகிறது. அதுவே உயர்வை அளிக்கிறது என்ற உண்மையினை மாணவர்கட்கு அறியச் செய்கிறது. இதனால் கல்வியைக் காட்டிலும் ஒழுக்கமே உயர்வாகக் கருதப்படுகிறது.

முடிவுரை : இவ்வாறாக பொது நோக்கங்கள் நிறைவேற பள்ளிகள் தமிழ் கற்பிக்க வேண்டியுள்ளது அவசியமே என்பதை தெளிவாக்குகின்றன.

11. இன்றைய உயர்நிலை பள்ளித் தமிழ்பாடத் திட்டம் நிறைகுறைகள்

உயர்நிலை பள்ளித் தமிழ்பாடத்திட்டத்தில் மாணவர்கள் எந்த அளவு பாட அறிவு பெற்றிருக்க வேண்டும். எந்த திறன்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். எந்த திறன்களை வளர்த்திருக்க வேண்டும். என்று கல்வி ஏற்பாடு பொதுப்படக் கூறுகிறது. எந்த வகுப்பிற்கு ஏற்ப அறிவு பெற வேண்டும். அதற்கேற்ப பாட உள்ளடக்கததை பட்டியலிட்டு தருகின்றது. மொழிப்பாடம் திறன் பாடம் என்பதால் திறன்கள் அடிப்படையில் மாணவர் மொழித்திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் அவர்கள் பெற வேண்டிய மதிப்பீடு, தேர்வு முறை தருகின்றது. இவ்வாறு உயர்நிலை பாடத்திட்டம் அமைந்துள்ளது.

இலக்கணம் என்ற தனியாக பாடப்புத்தகம் அமைத்து அதில் எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என முறையாக ஐந்து இலக்கணம் அறியும் வண்ணம் மாணவர்கள் திறன் (இலக்கணத்திறன்) வளர வகைசெய்யும் விதத்தில் இலக்கணப்பாடம் அமைந்துள்ளது.

நிறைகள் :1) உயர்நிலை பாடத்திட்டத்தில் போதுமான அளவு அனைத்து திறன்களும் வளரும் வண்ணம் அமையப்பட்டுள்ளது.

2) உரைநடை செய்யுள், துணைபாடம் இலக்கணம் இவையாவும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய செய்திகளாக அமையப்பெற்றமை மாணவர்கள் முழுமையான அறிவை பெற உதவும்.

3) பாடத்திட்டங்கள் யாவும் உயர்நிலைக்கு ஏற்றவாறு தாம் அமைந்துள்ளது.

4) கற்றல் கற்பித்தலுக்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளது.

குறைகள் : 1) பல வருடங்களாக ஒரே மாதிரி அமைப்பில் பாடத்திட்டம் அமைந்துள்ளது.

2) ஒன்றை படித்தபின்பு மேலும் அது சம்பந்தமான (தொடர்புடைய) புத்தகங்களை படிப்பதற்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதாக அமையவில்லை.

1. திட்டமிட்டு கற்றலில் இலக்கணத்தை கற்பி *தானே கற்றலின் வகைகள் :* திட்டமிட்டு கற்றலின் முக்கியமான மூன்று வகைகளை அறிந்து கொள்வோம்.

1) நேர்வழித் திட்டம். 2. இடையீடு நேர்வழித் திட்டம். 3) கிளை வழி திட்டம் எனப்படும்.

*1) நேர்வழித் திட்டம் :* இந்நேர்வழித் திட்டத்தை நீள்முறை பாட அமைப்பு என்றும் கூறுவர். இம்முறையில் அமைக்கப்பட்டுள்ள பாட பொருள், பகுதிகள் தொடர்ச்சியாக ஒன்றன்பின் ஒன்றாக அமைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு பகுதியும் ஒரு சிறிய பாடப்பகுதியாக இருக்கும். சிறுசிறு பகுதியாக மாணவர்கள் முன்னேற வாய்ப்பளிப்பதற்காகவும் இருக்கும். சரியான விடையை மாணவர் உணரும் வகையில், ஒவ்வொரு சிறு பகுதியிலும் குறிப்புகள் கொடுக்கப்படடிருக்கும். இதில் மாணவர்கள் தவறின்றி புரிந்துகொள்ளமுடியும். நேர்வழித் திட்டமானது கீழ் உள்ள முறையில் அமையும்.

1) தூண்டல் (அ) சிறு அளவிலான பாடச் செய்தி

2) துலங்கல் (ஆ) அப்பாடச் செய்தியை ஒட்டியவினா தருவதற்கான இடைவெளி – ஒரிரு சொற்றொடர்களில்

3) ஊடகக் குறிப்பு – இப்பகுதி சில சட்டங்களில் அமையும் , சிலவற்றில் அமையாது.

சட்டம் – 2

1) சட்டம் ஒன்றின் சரியான விடை 2) செய்தி 3) வினா 4) விடை

5) ஊடகக்குறிப்பு

*கணினி முறை (காட்சிக் கேள்வி) :* கணினி முறையில் பாடப்பகுதியில் உருவாக்கி திரையில் வீழ்த்தி காட்சிக் கேள்வி வகுப்பை நடத்துதல் மிகச் சிறந்த மாணவர்கட்கு மிக சிறந்த கவனத்தை தரவல்லதாக அமைகிறது. தேவையானபோது மீண்டும் நாம் உபயோகித்து பார்க்கலாம். இதில் பாடப்பகுதி அனைத்தும் விரிவாக வடிவமைக்கப்பட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த முறை தற்போது விரிவடைந்து விரிச்சுவல் டீச்சிங் என்ற அளவிலே மேலும் விரிவடைந்துள்ளது.

இவ்வாறு தமிழ் மொழி கற்றுக் கொடுப்பதில் பல்வேறு சிறந்த புதிய உத்திகள் கையாளப்படுகின்றன. இவையாவும் சிறந்த புரிதலையும் அதிக கவனம் ஆர்வத்தையும் தருகிறது.

2. *தமிழ் மொழிக் கற்பித்தலில் கணிப்பொறியின் பாங்கினையும் ஆக்கக் கேடுகளையும்*

*கணிப்பொறியின் பங்கு :* கணிப்பொறி கற்பித்தலில் புதிய வழிமுறையினை தந்துள்ளது. இதன்மூலம் எதிர்காலத்தில் கணிப்பொறிகள் எந்த அளவிற்கு கல்விச் செயலில் புரட்சிகரமான பயனுள்ள மாற்றங்களை தோற்றுவிக்கவள்ளன என்பதற்கு நம்பிக்கையூட்டும் முன்னோடிகளாக விளங்குகின்றன.

1) பள்ளிகளில் ஆசிரியர்களை பல்வேறு சலிப்பூட்டும் செயல்களில் ஈடுபடவேண்டியுள்ளது. மாணக்கர்களை பல்வேறு செயல்களில் ஈடுபட வைக்க வேண்டிள்ளது. பல்வேறு வகுப்புகளாக பாட கால அட்டவணைகள் தயாரித்து பிரித்தல், பல்வேறு

விவரங்களை தேர்ந்தெடுத்து பதிவு செய்து வைத்தல் புதுப்பித்தல் தேவைப்படும் போது பழைய பதிவுகளில் இருந்து தேவையான செய்திகளை தேடி படி எடுத்தல், மதிப்பெண் பட்டியல்கள் தயார் செய்தல் ஆகியன போன்று பல்வே செயல்களை கணிப்பொறி கொண்டு எளிதாக்கலாம்.

2) பள்ளிகளில் கற்பித்தலுக்கான தேவையான அனைத்தும் எல்லா மாணவர்கட்கும் போதுமானதாக இராது. மாணாக்கர் பற்றிய செய்திகளை ரகசியமாக வைத்துக் கொள்ள கணிப்பொறி உதவுகிறது. மாணக்கர்கட்கு அறிவுரை கூறி (கவுன்சிலிங்) ஆலோசனை வழங்கும் செயலிலும் கணிப்பொறி பயன்படுகிறது. கற்றல் கற்பித்தலில் பாடத் தொடர்பினை ஏற்படுத்தி பயன்பாடுடைய உயர்ந்ததாகவும் கணிப்பொறிகள் பயன்படுகின்றன.

கல்வியில் கற்றல் பங்கு :

கணிப்பொறி சார்ந்த கற்பித்தல் கணிப்பொறியின் செயற்பாடு எந்த அளவுக்கு கற்பித்தலில் முக்கியத்துவம் பெற்று காணப்படுகிறது என்பதனைப் பொறுத்து சிலவகைப்பட்ட முறைகள் கையாளப்படுகின்றன. 1) கணிப்பொறியின் முழுமையான மேலாண்மையினை ஏற்று நிகழும் கற்பித்தல் (CMI) 2) கணிப்பொறியினி அடிப்படையில் அமைக்கப்படும் (CBI கற்பித்தல் மற்றும் கணிப் பொறியின் துணையுடன் நிகழும் கற்பித்தல் (CAI) ஆகியன இவையாம். இவற்றுள் மூன்றாவது முறை நேரடியாக வகுப்பறை கற்பித்தலுக்கு மிகுதியும் உதவும். கணிப்பொறியின் மேலாண்மைய ஏற்று நடத்தும் கற்பித்தலில் விவரங்களை பதிவு செய்தல் (Rec. Key), ஆகும். நேரடியாக கற்போனுக்கு கற்பித்தலில் இம்முறை ஈடுபடாது. கற்போனது தற்போதைய பொருளறிவு நிலை கற்றலில் அவனிடம் உள்ள குறைபாடுகள், இவைவெளிகள் இவற்றை நிவர்த்திக்க பயன்படும். வழிகள் போன்றவற்றை தொகுத்து அளிக்கும். கம்ப்யூட்டரின் மேலாண்மை பணிகளாக அமையும். கணிப்பொறி கொண்டு கற்பிக்கப்படும் கற்பித்தல் பெரும்பாலும் தொழில் சார்ந்த பயிற்சியில் அதிகம் பயன்படும். இம்முறையில் உண்மை, வாழ்க்கை நிலைமை போன்ற ஒரு கற்பித்தல் நிலைமையை உருவாக்கும். கணிப்பொறியின் இப்பணியின் விளைவாக நம்மால் எனில் ஆராயமுடியாத வாழ்க்கை நிகழ்ச்சிகள் பற்றி அறிந்து அவற்றிற்கேற்ப செயல்பட பயிற்சி அளித்தல் இயலும்.

1. படைப்பாற்றலை கற்பித்தல் :

மாணவர்கள் தங்களின் எண்ண பிரதிபலிப்பு படைப்பாற்றலாக உருவெடுக்க வேண்டும் எழுத்து-வாய்பாடு-நடிப்பு-என இவ்வகையில் படைப்பாற்றலை ஏற்படுத்த முடியும். நோக்கமாக எழுதுவதில் எளிமை, இனிமை, சொல்வளம், நயம், பொருள் இனிமை இவை எல்லாம் பொருந்த படைப்பு அமைய வேண்டும். எழுதுவதில் கதை, கவிதை, கட்டுரை, உரைநடை என பல வடிவங்களில் நல்ல எண்ணங்கள் சிந்தனைகள், கருத்துக்களாக அமைவன எழுத்தாற்றல் மிக்க படைப்புகளாகும். கண்ணதாசம், பாரதிதாசன், பாரதியார், சுரதா, அண்ணா என பற்பல எழுத்தாற்றல் மிக்கவர்கள் இருந்துள்ளனர். இவர்கள் தங்களின் எழுத்தாற்றல் மூலமாக மக்களை நல்வழிப்படுத்தினார்கள். அரசியல், விழிப்புணர்ச்சி, கருத்து பரிமாற்றம் என்பனவெல்லாம் எழுதுவதினால் பெறப்படுவனவாகும். இதை ஒவ்வொரு மாணவர்களும் படைப்பிலே எழுத்தாற்றலை பின்பற்ற வேண்டும்.

சமுதாயம் சிறக்க எழுத்து மூலம் கருத்தை வெளியிட முடியும் என்பதற்கு நமது இலக்கியர்களே முன்னோடிகளாகும்.

2. இலக்கிய நடையில் கற்பித்தல் :

ஒவ்வொரு வகுப்புக்கும் ஏற்ற நடையில் பாடம் கற்பித்தல் சிறப்பு உள்ளது. அதில் இலக்கிய நடை என்பது. கவிதையை படிக்கும் போது பாடிக்காட்டி பாடம் நடத்துவது சிறப்பு படித்து ஏற்ற, இறக்கம் அமைய பாடம் நடத்துவது. நடிப்பு முறையெனனின் நாடகப் பாங்கிள் இருப்பது எதுவோ அவற்றை நடித்துக்காட்டி பாடம் நடத்துவதாகும். இவ்வாறு இலக்கிய நடை என்பது பாடப்பகுதிக்கு ஏற்றவாறு கற்பித்தல் முறையே ஆக்கிக் கொள்வதாகும்.

3. கருத்துக்களும், சிந்தனைகளும் : எழுதும் ஆற்றல் படைத்தோர்க்கு தனது கருத்துக்கடை படைத்துக்காட்டி மாணவர் கட்டு சென்று சேறும் வாய்ப்பாகும். படைக்கும் திறன் உடையவர்கள் தனது கருத்துக்களையும் சிந்தனைகளையும் வெளிப்படுத்த உதவுவது தான் படைப்பாற்றல் எழுதும் திறனாகும்.

4. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப தமிழ் நுட்ப வார்த்தைகளை உருவாக்கள் :

எழுதும் திறன் கொண்டவர்கள் புதிய புதிய சொற்களை உருவாக்குவதிலும் திறன் கொண்டவர்களாகத் தான் இருப்பர். அப்படித்தான் அறிவியல் தொழில்நுட்ப வார்த்தைகளை தமிழில் சொற்களை உருவாக்குதல் சாலச் சிறந்தது என நிறைய சொற்களை உருவாக்கியுள்ளனர். எடுத்துக்காட்டாக மிதிவண்டி, தொடர்வண்டி, ஊர்தி, வங்கி, அங்கி, பேருந்து, பொறியியல், எந்திரம், என பல.

5. தெளிவு, விளக்கம், எளிமை, சுருக்கம் : எழுத்தின் மூலம் தமது எந்த கருத்துகளையும், சிந்தனைகளையும் கூறலாம். அவை எளிமையாக கருத்து தெளிவாக விளக்கமாக, சுருக்கமாக அமைத்து தனது படைப்பை பெருமை சேர்க்க முடியும். உதாரணமாக திருக்குறள், ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் என பல இலக்கியங்கள் பெரிய பெரிய விஷயங்களையும் கூட எளிய மாத்திரை வடிவில் தந்துள்ளனர் குறிப்பிடத்தக்கது.

6. இலக்கிய விமர்சனம் பொது விதிகள் : விமர்சனம் எனும்போது படைக்கப்பெற்ற இலக்கியத்தில் சிறப்பு என்ன, ஏற்புடைமை என்ன உண்மை, பொய்மை என்ன என்பதை விவரிப்பது தான் விமர்சனம் ஆகும் இதை மொழி அறிவு, கருத்தாயம் அனுபவம் மிக்க ஒருவரே விமர்சனம் செய்யத் தகுதியானவர். யார் வேண்டுமானாலும் விமர்சனம் செய்துவிட முடியாது. எக்கருத்த எங்ஙனம் எந்த ஆதராமும் கொண்டும் உயர்த்த வீழ்த்த முடியும் இதுவே விமர்சனம் ஆகும்.

## Unit 8

1. பாட நூலின் ஆக்கக் கூறுகளை மதிப்பிடுக?

பாடநூலின் ஆக்கக் கூறுகள் என்பது பாடநூல் எந்த அளவிற்கு மாணவர்கட்கு பயன்பாடு உடையதாக அமைகிறது என்பதே அவை கீழ் வரிசைபடுத்தப்படுகிறது.

1) பாடநூலின் கருத்துக்கள் எளிமை, தெளிவாகவும் உள்ளது.

2) அனைத்து தரப்பட்ட மாணவர்களும் படிக்கும் வண்ணம் அமைந்துள்ளது.

3) நிலைகட்கு உட்பட்டதாக அமைய வேண்டும் உயர்வு தாழ்வு இருக்கக் கூடாது.

4) தேவையான அளவிற்கு குறையாமலும் அதிகமாகாமலும் கருத்துக்கள் அமைவதே சரியான பாடநூல் என்கிறோம்.

2. தமிழ்மொழி கற்பித்தலில் கையாளப்படும் புதிய உத்திகள்

தமிழ்மொழி கற்பித்தலில் புதிய முறைகளாக நாம் கருதுவது நடிப்புமுறை, விளையாட்டுமுறை, செயல்திட்டமுறை, ஆய்வுக்களமுறை, கணினிவழி காட்சிக் கேள்விமுறை என தற்போது மிக்க பயன்பாடுடைய முறையில் கற்பித்தல் எளிதாகின்றது. இனிமையாகின்றது.

மாணக்கர்களை மையமாக கொண்டு அமையம் தற்போதைய கல்வி கொள்கை பல்வேறு புதிய கோணங்களில் கற்பிக்க துணை செய்வனவாக அமையும். அவை.

<u>விளைாட்டுமுறை :</u> விளையாட்டு முறைப்படி தமிழ் கற்பிக்க 1 முதல் 5 வரை மிக சிறப்பாக அமையும். விளையாடும் போதே நிறைய கருத்துக்களை புரிந்து கொள்ளும் வகையில் தொடக்க நிலை, நடுநிலைப் பள்ளிகளில் மாணவர்கட்கு பெரிதும் பயன்படும்.

1) படங்களையும் பெயர்களையும் பொருத்துதல்

2) பொருள்களைப் பார்த்து பெயர் எழுதச் சொல்லுதல்

3) பொது எழுத்தோடு சேர்த்து படித்தல்.

4) மாறியுள்ள எழுத்துக்களை பொருள் அமைய மாற்றி அமைத்தல்.

5) எழுத்துக் கூட்டல் விளையாட்டு.

<u>நடுநிலைப் பள்ளி மாணவர்கட்கு :</u>

1) இரட்டைக் கொம்பு சேர்த்து சொல்லாக்குதல்.

2) சொற்களை முறைமாறி கொடுத்து வாக்கிமாக ஆக்குதல்.

3) எதிர்ச்சொல், சேர்த்து எழுதுதல், பிரித்து எழுதுதல்

4) அன்னியனைக் கண்டுபிடித்தல், வேறுபடுத்துதல்.

5) படம் ஒன்றைக்காட்டி ஏற்ற தலைப்பு தரச் சொல்லுதல்.

6) கதை அமைத்தல் , ஓர் ஒலியமைந்த சொற்கள் கூறுதல்.

7) விடுகதைகள் அமைத்து பதில் பெறுதல்.

இவ்வாறாக தொடக்க நிலை, இடைநிலை பள்ளி மாணவர்கட்கு விளையாட்டு முறையில் மொழியை கற்றுக் கொடுக்கலாம்.

<u>நடிப்பு முறை :</u> நடிப்பு முறை என்பது இடைநிலை உயர்ந்த மாணவர்களை ஏற்ற பாடத்திற்கு நாடகமாக பாத்திரமேற்று நடித்துக் காட்டுதல் நல்ல கற்றலை தரும். கற்பனை குழந்தைகட்கு ஏற்பட்டு தானும் நடித்து பலவற்றைக் கற்றுக் கொள்ளும். உதாரணமாக மரக்கட்டை, ரயில்வண்டியாக, நாற்காலியாக, கப்பலாக, சிறுவனோ, பால்காரன், கடைக்காரர் என்று நடிப்பதில் பேரார்வம் காட்டுவார்கள். அவ்வகையில் உயர்நிலை பள்ளி மாணவர்களுக்கு தேவையான பாடத்தை நடிப்பு முறையில் நடத்திக் கற்றுக் கொடுக்கலாம்.

ஆய்வுக் கள முறை : இஃது கற்றலை அதன் இடத்திலே சென்று நேரடியாக (களம்) செயல்களை அறிதல், கோயில் கலை, வரலாறு, சுற்றுலாத் தளங்கள், நூல் நிலையம், ரயில் நிலையம், தபால் நிலையம், இப்படி பல்வேறு பொது விபரங்களை அறிந்து கொள்வது சிறந்த ஒரு கற்றலாகவும் மொழிபாடத்திற்கு அமைகிறது.

கணினி முறை (காட்சிக் கேள்வி) : கணினி முறையில் பாடப்பகுதியில் உருவாக்கி திரையில் வீழ்த்தி காட்சிக் கேள்வி வகுப்பை நடத்துதல் மிகச் சிறந்த மாணவர்கட்கு மிக சிறந்த கவனத்தை தரவல்லதாக அமைகிறது. தேவையானபோது மீண்டும் நாம் உபயோகித்து பார்க்கலாம். இதில் பாடப்பகுதி அனைத்தும் விரிவாக வடிவமைக்கப்பட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த முறை தற்போது விரிவடைந்து விரிச்சுவல் டீச்சிங் என்ற அளவிலே மேலும் விரிவடைந்துள்ளது.

இவ்வாறு தமிழ் மொழி கற்றுக் கொடுப்பதில் பல்வேறு சிறந்த புதிய உத்திகள் கையாளப்படுகின்றன. இவையாவும் சிறந்த புரிதலையும் அதிக கவனம் ஆர்வத்தையும் தருகிறது.

3. மொழியாசிரியரின் பண்புநலன்கள; :-

முன்னுரை : மொழியாசிரியரின் பண்பு நலன்கள் எண்ணற்றன. அவை மொழிப்பற்று, இலக்கணப் புலமை, எடுத்துக்கூறும் ஆற்றல், குரலி ஏற்றத்தாழ்வு திறமையாக எழுதும் திறன், உள்ளங்களை ஒன்றாக்கி இணைத்தல், உளநூல் வள்ளுனர் கலையார்வம், தவறுகளை திருத்தும் பண்புகள், பயிற்றலில் அடிப்படை விதிகளை தெரிந்தவராயிறுத்தல், நகைச்சுவை நாட்டம், என பல்வேறு பண்புகளை தன்னகத்தே கொண்டவராயின் மொழியாசிரியர் என கூறுதல் சிறப்பாகும். அவற்றை ஒவ்வொன்றாக காண்போமாக.

உளநூல் வள்ளுநர் : மாணவர்கள் மனநிலை உணர்வதற்கு ஆசிரியர் உளவியல் நன்கு அறிந்தவராயிருத்தல் மிக மிக அவசியம். அதனால் மாணவரின் மனநிலை புரிந்து கொண்டு பாடம் நடத்துவதே சிறப்பு ஏனெனில் கிட்டதட்ட இருபது நிமிடங்கள் கவனிக்கத் தோன்றும் பிறகு மாணவர்கட்கு உற்சாகமான செய்திகளைச் சொல்லி மீண்டும் பாடம் பற்றி அறிதல், மாணவனின் உளத்தன்மை அறிந்து பாடம் கற்பிக்க உளநூல் புலமை தேவை.

நல்லொழுக்கம் :

எத்துணைதான் கற்பித்தல் சிறப்பாக இருந்தாலும் ஒழுக்கம் முதலில் நன்றாக அமைய வேண்டும். அதற்கு ஆசிரியர் ஒழுக்கத்துடன் செயல்பட வேண்டும் அதை பார்த்து மாணவர்கள் செயல்படுவர். நிறைய ஒழுக்க நெறிகதைகள், இலக்கியங்களை கற்பித்தல் மூலமாக நல்லொழுக்கம் மாணவர்கட்கு தேவை.

4. ஆய்வின் வகைகள் :

அய்வு வகைகள் பல்வேறு பட்டணவாக உள்ளன.

10. இலக்கிய ஆய்வு 2. வரலாறு ஆய்வு 3. புலனாய்வு

4. உற்றுநோக்கல் ஆய்வு 5. கள ஆய்வு 6. அறிவியல் ஆய்வு

7.புதியன கண்டுபிடிக்கும் ஆய்வு 8. பகுப்பாய்வு 9. திறனாய்வு

என மேலும் பல்வேறு வகையான ஆய்வுகளை பார்க்க முடிகிறது. இங்கே ஆய்வு என்பது,

1. புதியன ஒன்றை கண்டுபிடிப்பது

2. இருப்பனவற்றில் சிக்கலை தீர்ப்பது

3. இருப்பவற்றில் மேலும் எளிமை செய்வது

என்பதே ஆய்வின் நோக்கங்களாகும்.

5. செயல் ஆய்வு : பல சிக்கல்கள் பிரச்சனைகள் தீர்வு காண வேண்டியவை கருத்தில் கொண்டு அவற்றை திரட்டி செயல்திட்டத்தை மையமாககக் கொண்டு நேரடியாக பயிற்சியல் ஈடுபடுகின்றனர். செயலை செய்து ஆராய்கின்றனர் அதனையே செயலாய்வு என்கின்றனர் இதில், செயலை தேர்ந்த எடுத்தல், திட்டமிடுதல், நிறைவேற்றுதல், மதிப்பிடல் என பகுத்து செயல்திட்டமுறையினை மேற்கொள்ள வேண்டும். நன்மைகளாக, நோக்கத்துடன் செயலில் ஈடுபடல், பொறுப்புணர்ச்சி கூட்டுறவு மனப்பான்மை, விட்டுக்கொடுத்தல், சிக்கல்களைத் திர்த்தல், உடல் உழைப்பு, மன எதிர்பார்ப்பு என செயல்திட்ட முறையில் சிறப்புகள். இதில் சில குறைகளும் உள்ளன. பாடப்பொரள் அனைத்தையும் அறியமுடியாது, செயல்திட்டத்தல் இயல்பாக பொருந்திவரும் பாடங்கட்கு மட்டுமே இவ்வாய்வு செய்யமுடியும். வெளி இடங்களில் நடைபெறுவதால் ஒழுங்கு நடவடிக்கை, ஏமாற்றுதல், பணச்செலவு, காலச் செலவு, இவ்வாறு தீமைகளும்.

6. புதிய ஆய்வுகள் : பல்வேறு ஆய்வுமுறைப்படி நம் பாடப்பகுதியினை கற்பது போலவே அவர்கட்கு புதிய ஆய்வு சிந்தனை தோற்றவேண்டும். மேலும், புதிய வழியில் ஆய்வு பற்றிய செய்திகளைத் தரவேண்டும்.

## Unit 9

1. மொழியாசிரியரின் நிலை : தற்கால சூழ்நிலையின் ஆசிரியரின் பற்று கல்வித் தகுதி பயிற்சி பிற ஆசிரியர்களுடன் கலந்துரையாடல் இவற்றுடன் மொழியாசிரியர் பண்புகளாக கீழ்கண்டவற்றை பார்க்கலாம்.

2. மொழியாசிரியரின் பண்புகள் :

1. மொழிப்பற்று 2. இலக்கண இலக்கியப் புலமை

3. எடுத்துக்கூறும் ஆற்றல் 4. குரலில் ஏற்றத் தாழ்வு

5. திறமையாக எழுதும் திறன் 6. உள்ளங்களை ஒன்றாக்குதல்

7. உளநூல் வள்ளுனர் 8. கலை ஆர்வம்

9. பருவம் அறிந்து பயிற்றுதல் 10. பயிற்றலில் அடிப்படை விதிகள்

11. விழைவுடன் கற்பித்தல் 12. தற்பெருமை, சினம் இல்லாதிருத்தல்

13. தவறுகளைத் திருத்தும் பண்பு 14. நகைச்சுவை நாட்டம்

15. நல்லொழுக்கம், பெருந்தன்மை 16. மொழியாக்கத்திறன்/நூல்கள் இயற்றல்

17. உடல் ஓம்பல், உலகப்பொது அறிவு 18. உலகத்தோடு ஒட்ட ஒழுகல்

மேற்சொன்ன பண்புகள் அனைத்தும் மொழி ஆசிரியருக்கு உரித்தானதாகும். இவையே மொழியாசிரியரின் உயர்ந்த பண்புகள் ஆகும்.

2. பணிமுன் பயிற்சி : ஆசிரியர் பணிக்கு செல்லும் முன் சரியான கல்வித் தகுதியுடன் ஓராண்டு ஆசிரியர் பணிக்காக பி.எட்., பயிற்சி பெறுவது அவசியம் தமிழாசிரியருக்கு 5 மாத பயிற்சியான பட்டைய பயிற்சியும் இருக்கும். (பி.டீ.சி) இவ்வாறு தகுந்த ஆசிரியர்களுக்கு கல்வித் தகுதிகள் நிறைவு பெற்றவுடன் ஆசிரியர்க்கான பயிற்சி மேற்கொள்ளுதலே பணி முன் பயிற்சி ஆகும்.

3. பணியிடை பயிற்சி : பணியிடை பயிற்சி என்பது பணியில் சேர்ந்த பிறகு அளிக்கப்படும் புத்தொளிப் பயிற்சி, அது ஓரிரு நாட்கள் நடக்கும் சில நேரங்களில் 5, 10, 15, 30 நாட்கள் கூட நடைபெறும். இந்த இடைக்கால் குருதியாக பயிற்சி பணியிடைப் பயிற்சி எனப்படும். (ஓரியண்டேஷன்) கருத்துயர்வு புதியன அறிதல், இவற்றிற்காக இவ்பணியிடை பயிற்சி அளிக்கப்படுகிறது.

செயல் தொடர் ஆராய்சியின் பயன்கள் யாவை?

ஆராய்ச்சியில் பல்வேறு தொடர் ஆராய்க்சிகள் நடைபெறுகின்றன. அதாவது ஒரே செய்தியை பல்வேறு ஆராய்க்சியாளர்கள் அடுத்தடுத்து செய்கின்றனர். அதுமற்ற ஆராய்ச்சியாளர்களுக்கு பயன்படுகிறது. மேலும் இவ்வாய்ச்சி முக்கிய நுனுக்கமான செய்திகளை பகுத்துப்பார்க்க உதவுகிறது.

நற்றமிழ் கற்பிக்கும் முறைகள் – நிறை, குறைகள்

<u>நற்றமிழ் கற்பிக்கும் முறைகள் :</u>

<u>நிறைகள் :</u> 1) மனித இயல்புக்கு இம்முறை பொருத்தமாக உள்ளது. ஆதி மனிதனும் வளரும் இளம் குழந்தைகளும் பல நிலைகளில் ஒத்த இயல்புடையவர்கள் என்பது தெளிவு. அவ்வாதி மனிதனும் இன்றைய குழந்தைகளும் கற்பதும் கையாளுவதும் சொற்களே அன்றி எழுத்துக்கள் அல்ல. அம்மா, அப்பா, அக்கா, தாத்தா, பாட்டி போன்ற சொற்களைத்தான் இளங்குழவிகள் கூறுகின்றனர். சொற்கள் திருந்திய வடிவமாக இல்லாமல் கொச்சையாக மழலைக் கிளவிகளாக இருக்கக்கூடும். எனினும் குழந்தைகளின் பேச்சு வடிவம் சொல்லே அன்றி, எழுத்து அன்று. எனவே, இச்சொல் முறை மனித இயல்புக்கு ஒத்ததாக உள்ளது.

2) ஒவ்வொரு சொல்லுக்கும் தனித்னிப் பொருள் உண்டு. தனித்து இருக்கும்பொழுது எப்பொருளையும் உணர்த்தாத எழுத்துக்கள் ஒன்றுசேர்ந்து ஒரு சொல்லாக உருவினைப் பெறுங்கால் தனியே அச்சொல்லுக்கென ஒரு பொருளும் உண்டாகின்றது. எனவே, பொருள் அற்ற எழுத்தைவிடப் பொருள் நிறைந்த சொற்களைக் கற்பிப்பது சாலவும் நன்று. பொருள் புரியும் முழுச் சொல் இன்பமும் கவர்ச்சியும் பயப்பதாகும்.

<u>குறைகள் :</u> 1) எழுத்துக் கூட்டிப்படிக்க வாய்ப்பில்லாத காரணத்தால் கற்ற எழுத்துக்களைக் கொண்ட புதுச் சொற்களைப் படிப்பதும், படித்தவற்றைப் பார்க்காமல் எழுதுவதும பிழை நிறைந்ததாக ஆகிவிடக் கூடும். மீண்டும் மீண்டும் சொற்களை எழுதும் பயிற்சி அளிப்பின், இக்குறையினை நீக்கக்கூடும்.

1. ஊடுக உட்கூறுகள் : உரைநடை, படங்கள், திரைப்படங்கள் இயக்கம், ஒலி ஒருங்கிணைப்பு இவ்வாறாக கணினி வழி தமிழ் கற்பித்தல் பெருமளவு உதவுகிறது.

2. தமிழ் கற்பித்தலில் துணைக்கருவிகளின் பங்களிப்பு

1) மாணவர்களைக் கற்றலில் ஊக்குவிக்க இவை பெரிதும் உதவுகின்றன.

2) கருத்துப்பொருள்களைக் காட்சிப் பொருளாக மாற்றுவதால் அவை கற்றலை எளிதாக்குகின்றது.

3) கற்றலில் வேகத்தை தருவதால் கற்றலுக்கான காலத்தை குறைக்கின்றது.

4) கற்றலை நிணைவை மிகுதியாக்கி மறத்தலைக் குறைக்கின்றன.

5) பல்வேறு தூண்டல்களை ஏற்படுத்தி கற்றலில் கவர்ச்சியையும் கவனத்தையும் உண்டாக்குகின்றன.

6) சுவையற்ற பாடத்தையும் சுவையுடையதாக்கிக் கற்பிக்க இவை உதவுகின்றன.

3. கல்வி ஏற்பாட்டை அமைப்பதற்கான கோட்பாடுகள்

கல்வி ஏற்பாடு என்பது மாணவர்கள் சிறப்பாக கல்வி பயில தேவையான பள்ளி கட்டிடம் வகுப்பறைகள், கரும்பலகை, காற்றோட்டம், பாடத்திட்டம் போன்ற எண்ணற்ற அடிப்படைகள் அனைத்தும் தேவைப்படுகிறது. மாணவனுடைய கல்வி தரம் உயரவேண்டும். மாணவனுடைய மனநிலை அறிந்து அவர்கட்கு ஏற்ற கல்விப் பொருளை அமைத்துக் கொடுத்து நல்ல சூழலில் நல்லதோர் கல்வி அமையுமாறு ஆக்குதலே கல்வி ஏற்பாட்டிற்கான கோட்பாடுகள் ஆகும்.

4. நோக்க அடிப்படைச் சோதனை

நோக்க அடிப்படைச் சோதனை என்பது புறவயப்பட்ட தன்மை என்று அழைப்பது உண்டு. இதற்கு ஒன்றிரு வரிகளில் விடையளிக்கும் வகையில் வினா அமைய வேண்டும் இதை யார் மதிப்பிட்டாலும் ஒரே முடிவைத் தருவணவாக அமைய வேண்டும். இதனையே புறவயப்பட்ட தன்மை என்போம்.

எ.கா : கோடிட்ட இடங்களை நிரப்புக, பொருத்துதல், சரியான விடைகளை தேர்ந்தெடுத்து எழுதுதல், விடுபட்ட வார்த்தைகளை, சொற்களை நிரப்புதல், மொழி பெயர்த்தல் என பல்வேறு வகையான நோக்க அடிப்படை சோதனை வினாக்களும் அமைப்பதனையே நோக்க அடிப்படைச் சோதனை என்பர்.

5. தமிழ் கற்பித்தலில் துணைக்கருவிகளின் பங்களிப்பு

1) மாணவர்களைக் கற்றலில் ஊக்குவிக்க இவை பெரிதும் உதவுகின்றன.

2) கருத்துப்பொருள்களைக் காட்சிப் பொருளாக மாற்றுவதால் அவை கற்றலை எளிதாக்குகின்றது.

3) கற்றலில் வேகத்தை தருவதால் கற்றலுக்கான காலத்தை குறைக்கின்றது.

4) கற்றலை நிணைவை மிகுதியாக்கி மறத்தலைக் குறைக்கின்றன.

5) பல்வேறு தூண்டல்களை ஏற்படுத்தி கற்றலில் கவர்ச்சியையும் கவனத்தையும் உண்டாக்குகின்றன.

6) சுவையற்ற பாடத்தையும் சுவையுடையதாக்கிக் கற்பிக்க இவை உதவுகின்றன.

6. குறையறி சோதனை kw;Wk; குறைதீர் பயிற்சியும்

<u>குறையறி சோதனைகள் :</u>

வகுப்பிலுள்ள எல்லா மாணவர்கட்கும் ஒரே மதிப்பெண்களை தேர்வில் பெறுவதில்லை இதற்கு காரணம் மாணவர்கள் சிலர் எளிதில் புரிந்து கொள்கின்றனர். மாணவர்கள் சிலர் கற்றுக் கொள்வதில் சிலருக்கு இடையூறுகள் ஏற்படுகின்றன. அதனால் அவாக்ள் பெறும் மதிப்பெண்களில் வேறுபாடுகள் தெரிகின்றன. மதிப்பெண்கள் குறைவதற்கு பல காரணங்கள் இருக்கலாம் அதை ஆசிரியர்கள் குறைபாடுகள் ஏன் ஏற்படுகின்றன என்பதை கண்டறிய வேண்டும். இதற்காக தயாரிக்கப்படும் சோதனை குறையறி சோதனைகள் குறையறி சோதனை எனப்படும்.

அடைவுச் சோதனை மாணவர்களின் நிலையை அறிய உதவுவதோடு மாணவர்களின் குறையை அறிய உதவுகிறது. மாணவர்கள் பாடத்திலுள்ள எந்த பகுதிகளில் தவறு செய்கிறார்கள் என கண்டுபிடிக்கலாம். ஒவ்வொரு வினாவிற்கான விடையை ஆராயும் போதும் இதற்கான நிலையை தெரிந்து கொள்ள முடியும். ஆகவே விடைகளை ஆராய்ந்த பிறகு மாணவர்களை தவறு செய்யும் பகுதிகளைக் குறித்துக் கொண்டு ஒவ்வொரு பகுதிக்கும் மாணவர்கள் படும் இடர்பாடுகளை குறித்துக்கொள்ளலாம். எனவே ஆசிரியர்கள் முதலில் குறையறி சோதனைகளை தயாரிக்கும் முறையை அறிந்திருக்க வேண்டும்.

<u>தயாரிக்கும் முறை :</u>

1) எந்த பகுதியில் எந்த குறை அல்லது தடைகள் உள்ளன என வரிசை படுத்திக்கொள்ள வேண்டும்.

2) ஒவ்வொரு பகுதிக்கும் தடைகளுக்கு ஏற்ப வினா அமைத்துக்கொள்ள வேண்டும். புறவய வினாக்களாக இருந்தால் எளிதில் கண்டுபிடிக்கலாம்.

3) ஒவ்வொரு பகுதிக்கும் கருத்திற்கும் ஏற்பவும் குறைகளுக்கு ஏற்பவும் நான்கு (அ) அதற்கும் மேற்பட்ட வினாக்கள் தயாரிக்கலாம்.

4) இவ்வாறு தயாரித்த வினாக்களைக் கொண்டு வினாத்தாள் தயார் செய்யலாம். வினா வடிவமைப்பில் கால அளவும் தேவையில்லை.

x தடை

| மாணவர் பெயர் | கடினம் 1<br>1 2 3 4 | கடினம் 2<br>1 2 3 4 5 | கடினம் 3<br>1 2 3 4 | கடினம் 4<br>1 2 3 4 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| R | √ x x √ | x x √ x √ | x x x √ | x x √ x | 12 |
| S | √ x x √ | x √ x x √ | x x x √ | x x x √ | 11 |
| T | √ x x x | x √ x x x | x √ x x | √ √ x x | 12 |
| U | √ x x x | x x x x √ | x x x √ | x x √ x | 13 |
| | 0442 | 42342 | 4341 | 3323 | 48 |

இவ்வட்டவணையிலிருந்து ஒவ்வொரு மாணவனுக்கும் உள்ள கடினம் (அ) தடைகள் அவன் செய்த தவற்றைக் கணக்கிடும் போது தெரியவரும் அதபோன்று ஒவ்வொரு வினாவிற்கும் விடையளிப்பதை வைத்து முதல் வினாவிற்கு எத்தனைபேர் தவறு செய்துள்ளனர்

இரண்டாவதில் எத்தனைபேர் தவறு செய்துள்ளனர் என வரிசையாக எல்லா வினாக்கட்கும் கண்டுபிடிக்கலாம். அதன்பிறகு அக்குறைகளை தீர்க்க மீண்டும் மாணவர்கட்கு பாடதை குறிப்பாக தவறு செய்த பகுதியை நன்றாக கற்பிக்க வேண்டும். மேலும் சில பயிற்சிகள் கொடுக்கலாம். வெவ்வேறு கற்பித்தல் முறைகளை பின்பற்றலாம். பலமுறை மீண்டும் மீண்டும் கற்பிக்கலாம். இனிமேல் இக்கருதுறைகளில் தவறு செய்யமாட்டார்கள் என தீர்மானிக்கும் வரை கற்பிக்கலாம். இதனை குறை தீர்க்கக் கற்பித்தல் எனலாம்.

7. தமிழ் கற்பித்தலை மதிப்பீடு

<u>உற்றுநோக்கல் முறை :</u> உற்றுநோக்கல் எனப்படுவது பிறரது நடத்தையினை நேரடியாகவும், கவனத்தோடும் நோக்கி இவ்வாறு நோக்குதல் வழியே பெறப்பட்ட விவரங்களை முறைப்படி ஆராய்ந்து முடிவுகள் பெறுதலைக் குறிக்கும். வாழ்க்கைத் துணுக்குமுறை, குறிப்பிடு பட்டியல் போன்ற பிறமுறைகளுக்கும் உற்று நோக்கல் அடிப்படையாக அமைகிறது.

கட்டுரை வகை தேர்வின் நன்மை தீமைகள் யாவை?

இதில் தொகுத்து அறியும் திறன், புரிந்து கொள்ளும் திறன் போன்றவை அளக்கப்படுகின்றன. ஒரு வினாவிற்கு நீளமான விடைகள் பத்தி பத்திகளாகப் பிரித்து எழுதுதல் வேண்டும். ஒரு பெரிய தலைப்பின் கீழ் சிறு சிறுதலைப்புகளும் விரிவாக்கப்படும். வயதுநிலைக்கேற்ப விடை எழுதும் அளவு மாறுபடும். எளிதில் பயன்படுத்தும் வகையில் உள்ள வினாக்கள் அடங்கும். கருத்துக்களைக் கோர்வையாக அமைக்கும் திறன், விமர்சனம் செய்யும் திறன், விளக்கம் கொடுக்கும் திறன் போன்றவற்றை அறிய உதவுகின்றது. இங்குள்ள வினாவிற்கு விடை எழுத நிறைப்படிக்க வேண்டும். கற்பனை வளத்தைப் பெருக்கவும், படிக்கும் ஆர்வத்தைத் தூண்டவும் பயன்படுகிறது. மொழிவளம் இதனால் கூடுகிறது. மொழித்திறனைப் பயன்படுத்த வாய்ப்பு கிடைக்கிறது. தகவல்களைச் தர்க்க ரீதியாக ஒழுங்குபடுத்தும் பழக்கம் ஏற்படுகிறது. மாணவர்களுடைய குறைகளை ஓரளவு அறிந்து கொள்ளலாம். வினாக்கள் தயாரிப்பது எளிதாக உள்ளது.

இம்முறையில் சில குறைகள் உள்ளன. மாணவர்களின் விடையை மதிப்பீடு செய்வதில் நம்பகத்தன்மை இருப்பதில்லை. ஆசிரியரின் சொந்த விருப்பு வெறுப்பு, மதிப்பெண் தருவதில் குறுக்கிட வாய்ப்பில்லை.

சில சமயங்களில் மாணவர்கள் மனப்பாடம் செய்து எழுதவும் வாய்ப்புண்டு.

8.தமிழ்மொழி கற்பித்தலில் கனிணியில் தமிழ் மொழியின் பங்கு :

தற்போது கணினி வழி தமது தமிர் பாடப்பகுதியினை நடத்துவதற்கு ஏதுவாக மற்ற மொழி சாப்வேர்கள் போல தமிழ் வழிமென் பொருள்கள் கிடைக்கின்றன அவற்றின் வழி பாடப்பகுதிகளை பகுத்து திட்டமிட்டு, கருத்துப்படங்கள் அட்டவணைகள், விளக்கங்கள் எ.கா. படங்கள் மொழி உச்சரிப்பு இப்படி இன்றைய செய்திகள் நம்மால் கணினி வழி அறியமுடிகிறது. கீ போர்டு தமிழ் எழுத்து பொழிந்தது கிடைக்கிறது. அதன் மூலம் எளிமையாக டைப் செய்து நிறைய பாடங்களை எளிமையாக ஸ்லைடு தயாரிக்க முடியும்.

இதை கணினி திரை வழியாக வழியாக மாணவர்கட்கு தெளிவாக கற்பிக்க முடியும். கற்பித்தல் நிகழ்வுகள் ஒர கம்ப்யூட்டர் ஒரு மனிதர் (மாணவர்) என்றில்லாமல் ஒரு கம்ப்யூட்டர் வழி பல ஆயிரம் மாணவர்களுக்கு பெரிய திரைமூலம் கற்பிக்க இயலும், தொலைவில் (வெளிநாடு) எங்கிருந்தாலும் கற்கமுடியும்.

9. கற்றல் வளமூலங்கள் : பொது நூலகங்கள், மியூசியம், பார்வைக்குரிய பொதுசிறப்புமிக்க இடங்கள், கோயில், ஆணைகள், அரண்மனைகள் நெட் சென்டர், கணினி வழியாக, நெட் சென்டர், சி.டி. (குறுந்தகடு, சுயகற்றல், கற்றலுக்கான மென்பொருள்கள்).

10. கணினி வெளியீடுகள் ; ஆய்வுகள், நெறிகள், மேற்படிப்பு படிக்க ஆய்விற்கு மிகவும் உறுதுணை செய்ய காப்பர் பேஸ்ட் எளிமை நெட்டிலிருந்து செய்திகள் அறிய ஆய்வாளருக்கு பெரிதும் துணை புரிவதாக அமையும்.

தமிழை கணினி கொண்டு கற்பிக்கும் போத டி.எல்.எம். என்ற கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் எளிமையாக தயாரிக்கலாம் 3டி 2டி என நமக்கு தேவையான வடிவில் ஒலியுடனும் கம்ப்யூட்டர் மென்திட்டம்.

பல் ஊடக வழியில் தகவல் அளித்தலை நடைமுறைப்படுத்த தேவையான கருவிகள்,

5. கம்ப்யூட்டர்
6. டிஜிட்டல் கம்ப்யூட்டர் அனலாக் முறையில் மாற்றியமைக்கும் முறைகள் ஆகியவற்றிற்கு இடையே பாலமாக அமையும் வண்கலன்கள்.
7. பல் ஊடக வழியில் தகவல்களை படுத்து ஆராயவும் முறைப்படுத்தவும் தேவையான கம்ப்யூட்டர் வண்கலன்கள்.

பல்வேறு தகவல்களை ஆய்வு செய்து ஒருங்கிணைக்கும் மென்பொருள் டிரைவர், ப்ராசசர்,